வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු








Email : news@eelanadu.lk | மலர் : 04 | 13.06.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 186 | பக்கங்கள் : 16


### ஆக்கிரமிப்பு காணிகள் விடுவிப்பு விவகாரம்

# கட்டளையை மீறிய பணிப்பாளரை கடுமையாக எச்சரித்த ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 13

வரலாற்று முக்கியத்து வம் மிக்க விகாரைகள் உள்ளிட்டவற்றை பாது காக்க வேண்டியது அவசிய மாகும். அதற்காக பொது மக்களின் காணி களை ஆக்கிரமிப்பதற்கு இட மளிக்க முடியாது. தேசிய கொள் கைகளை தொல்பொருள் திணைக் களம் பின்பற்ற வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் காணி பிரச்சினை களை தீர்ப்பதற்கான பொறிமுறை கள் தொடர்பில் விசேட கலந்துரை யாடலொன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாட லில் வடக்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதி காரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வர லாற்றை முழுமையாக அறிந்து கொள்ளாமல் செயல்படுகின்றனர் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , “நீங் கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது

15



# பதவி விலகினார் தொல்பொருள் பணிப்பாளர்

கொழும்பு, ஜூன் 13

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அநுர மான துங்க தனது பதவியில் இருந்து விலகி யுள்ளார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் கையளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமி ழரசு கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேசியிருந்த னர். இதில், தொல் பொருள் திணைக் களப் பணிப்பா ளர் உட்பட

15

## “மக்களுக்கு வரிச்சலுகை”

கொழும்பு, ஜூன் 13

மக்களுக்கு வரிச் சலுகையை எவ்வாறு வழங்குவது என்பது குறித்து அரசாங்கம் தற்போது கலந்துரை யாடி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள் ளார்.

வர்த்தகர்கள்

15

# ரணில் நிர்வாகத்தை வீழ்த்துவதற்கு பரந்த கூட்டணியை அமைப்போம்!

### டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 13

ரணில் விக்கிரமசிங்க வின் நிர்வாகத்தை கைப் பற்றும் இலக்குடன் கூட்டு எதிரணியை உருவாக்கு வதே சுதந்திர மக்கள் கூட்டணியின் நோக்கம் என்று அந்தக் கட்சியின் தலைவரும் எம். பியுமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தி யாளர் சந்திப்பில்,

“ரணில் விக்கிரமசிங்க வின் நிர்வாகத்தை தோற் கடிக்க சாத்தியமான பரந்த கூட்டணியை உருவாக்குவது அவசிய மாகும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் கூட்டணி மற்றும் ஏனைய அனைத்து எதிர் குழுக்களுடனும் பேச்சு நடத்த நாம் தயா ராக உள்ளோம்.

“தற்போதைய

15

## அகவை 90இல் ஆனந்தசங்கரி; கிளிநொச்சியில் விழா ஏற்பாடு!



யாழ்ப்பாணம், ஜூன் 13

தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரு மான வீ. ஆனந்தசங்கரிக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை 90ஆவது பிறந்த தினமாகும்.

இதையொட்டி கிளி நொச்சி - கனகபுரம் நண்பர் விடுதி மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரமாண்டமான விழா நடைபெறவுள்ளது.

தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் கட்சி

15

## மீன் உண்ட மற்றொருவரும் உயிரிழந்தார்

மட்டு,ஜூன் 13

நச்சுத்தன்மையான பேத்தை இன மீனை சமைத்து உண்டதால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு பெண் ணும் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - மாங்காடு எனும் கிரா மத்தில் கடந்த வியா ழக்கிழமை இடம்பெற்ற

15

# ‘துள்ளும்’ தமிழ் எம். பிக்களை சிறையில் அடைக்க வேண்டும்!

### சரத் வீரசேகர எம். பி.



கொழும்பு, ஜூன் 13

“பொலிஸாருடன் சண்டித்தனம் காட்டும் அளவுக்குத் தமிழ் பாரா ளுமன்ற உறுப்பினர்க ளுக்குத் துணிவு வந்துள் ளது. இப்படியானவர் களை கைது செய்து அவர்களுக்குப் பிணை வழங்காமல் சிறையில் தான் தொடர்ந்து அடைத்து வைத்திருக்க வேண்டும்.”

- இவ்வாறு தெரிவித் துள்ளார் சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

சமகால அரசியல் நில வரம் தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“பாராளுமன்ற சிறப் புரிமையைப் பயன் படுத்தி எதனையும் சாதிக் கலாம் என்று கஜேந்திர குமார், சாணக்கியன் உள் ளிட்ட தமிழ் பாராளு மன்ற உறுப்பினர் கள் எண்ணுகின் றார்கள். இது

15

## ரணில் - பெரமுன சந்திப்பால் அரசாங்கத்துக்குள் குழப்பம்?

கொழும்பு, ஜூன் 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறீலங்கா பொதுஜன பெரமுனவி னருக்கு விடுத்த அழைப்பை அடுத்து அரசாங்கத்துக்குள் குழப்பம் ஏற்பட்டுள் ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுஜன பெர முனவின் அமைச்சர் கள், இராஜாங்க அமைச் சர்கள், மாவட்ட தலை வர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திங்கட்கிழமை சந்தித்து பேச்சு நடத்த இருந்தார்.

மாலை 5 மணியள வில் இந்த சந்திப்பு நடை பெறும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில்

15

# 13இன் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறவே இடைக்கால நிர்வாகம்!

### இனப் பிரச்னைக்கான தீர்வல்ல என்கிறார் விக்னேஸ்வரன்



கொழும்பு, ஜூன் 13

வடக்கு, கிழக்கு மாகா ணங்களின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை தமிழ் மக்களின் இனப்பிரச் னைக்கான தீர்வு யோச னையல்ல. 13ஆவது திருத்தத்தில் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங் களை மீளப்பெறும் நோக்கம் உடையது என்று தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணி யின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

மாகாணங்களை இயக்க இடைக்கால நிர்வாக சபை அமைக்க வேண்டும் என்று கோரிக் கையுடன் கடந்த வியா ழக்கிழமை பிரத மர் தினேஷ் குண வர்த்தனவை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# லொகான் ரத்வத்தைக்கு எதிராக உடனடி நடவடிக்கை அவசியம்!

## சமூகம் மற்றும் மதத்துக்கான நிலையம்

கொழும்பு, ஜூன் 13

இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தைக்கு எதிராக உடனடி நடவடிக்கையை எடுக்கவேண்டும் என சமூகம் மற்றும் மதத்துக்கான நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராஜாங்க அமைச்சராக லொகான் ரத்வத்தை பதவி வகித்தவேளை வெலிக்கடை அனுராதபுரம் சிறைச்சாலைகளிற்குள் அத்துமீறி நுழைந்து சிறைக் கைதிகளை அச்சுறுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக கொலை முயற்சி குற்றச்சாட்டு உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தவேண்டும் என்று இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட தனிநபர் குழு பரிந்துரை செய்துள்ளமை தெரியவந்துள்ளது

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ர் தனிநபர் குழுவின் அறிக்கையை அடிப்படையாக வைத்து சமூகம் மற்றும் மதத்துக்கான நிலையம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

தனிநபர் குழுவின் அறிக்கை மிகுந்த பாரதூர தன்மை கொண்டதாக காணப்படுகின்ற போதிலும் லொகான் ரத்வத்தையை பொறுப்புக்கூறச் செய்வதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாமை குறித்து சமூகம் மற்றும் மதத்துக்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கரிசனை வெளியிட்டுள்ளார்.

குழுவின் அறிக்கை ரத்வத்தையின் பொருத்தமற்ற நடவடிக்கைகளை சுட்டிக்காட்டுவதுடன் அவர் செயற்பட்ட விதம் அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் காணப்பட்டது எனவும் தெரிவித்துள்ளதாக சமூகம் மற்றும் மதத்துக்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரத்வத்தையின் சிறைச்சாலை வருகையின்போது கைதிகளை பாதுகாப்பது தொடர்பான தங்களின் நடவடிக்கையை சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் எடுக்காததற்காக அவர்களிற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த அறிக்கையை நீதியமைச்சு இன்னமும் வெளியிடாதது குறித்தும் கவலை வெளியிட்டுள்ள சமூகம் மற்றும் மதத்துக்கான நிலையம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் அடிப்படையில் தாங்கள் விடுத்த வேண்டுகோளிற்கு பதிலளிப்பதற்கு நீண்டகாலம் எடுத்தது குறித்தும் கவலை வெளியிட்டுள்ளது.

லொகான் ரத்வத்தையை விசாரணை செய்து சித்திரவதை மற்றும் ஐ. சி. சி. பி. ஆர். சட்டத்தின்கீழ் வழக்குதாக்கல் செய்யவேண்டும் - என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# மாங்காய் பறிக்க முயன்று தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணத்தில் மாங்காய் பறிப்பதற்கு முயன்றவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு, பிரான்பற்றைச் சேர்ந்த வன்னிய சிங்கம் ரவீந்திரன் (வயது-37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்திக்கு அண்மையாகவுள்ள கட்டடத்துக்கு அருகில் வீதிக் கரையில் இவர் பயணித்த லொறி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. லொறியில் ஒரு காலும் மதிலில் ஒரு காலும் வைத்து ஏறி மாங்காய் பிடுங்குவதற்கு அவர் முயன்றபோது, எதிர்பாராதவிதமாகத் தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டி ருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

# நிதி மோசடி வெளிப்பட்டமையால் நிறுவன தலைவரை கொல்ல முயற்சி

கொழும்பு, ஜூன் 13

பத்திரமுல்லை கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்தின் தலைவரை கொலை செய்ய முயற்சித்தமை தொடர்பில் பொலிஸாரின் விசாரணையில் பல விடயங்கள் வெளியாகியுள்ளன.

மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில், முன்னாள் தலைவரும் பிரதான சந்தேக நபரினதும் நிதி மோசடிகள் வெளிப்பட்டதன் காரணமாகவே அவரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றத்தின் பிரதான சந்தேக நபர் மாத்தறை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மற்றைய சந்தேக நபர்களில் ஓய்வுபெற்ற இராணுவ வீரர், பஸ் ஒன்றின் உரிமையாளர் மற்றும் பஸ் நடத்துநர் ஆகியோர் அடங்குவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# டெங்கு பரவும் சூழல் இருந்தால் அபராதம்!

கொழும்பு, ஜூன் 13

வீடுகளில் அல்லது வணிக நிறுவங்களில் டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டால் அதற்கான அபராதம் விதிக்கும் முறைமை அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

கடந்த சில வாரங்களாக பல்வேறு விழிப்புணர்வு மற்றும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டாலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இதுவரை 43 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்தோடு கடந்த ஐந்து மாதங்களில் 26 பேர் டொங்கு நோயால் உயிரிழந்தனர். (ஐ)

# பறங்கியாற்றில் மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் கைதாகினர்!

முல்லைத்தீவு, ஜூன் 13

மாந்தை கிழக்கு பறங்கியாறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார், விசேட அதிரடி படையினர் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின் போதே இவர்கள் கைது செய்யப்படுள்ளனர்.

இதன்போது மணல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட மூன்று டிராக்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன், அவற்றின் சாரதிகளே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்து மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



இதேவேளை, நேற்று அதிகாலை வன்னிவிளாங்குளம் மூன்றுமுறிப்பு பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி காட்டு மரங்களை ஏற்றிச்சென்ற உழவு இயந்திரமொன்று பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது குற்றச்செயலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## போதை மாத்திரையுடன் கோண்டாவிலில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 13

கோண்டாவில் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 9 அட்டைகளில் 90 மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் மீட்கப்பட்ட மாத்திரைகளையும் கைது செய்யப்பட்ட நபரையும் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர். (ஐ)

# ஈழத் தமிழ் சிறுகதைகள் தொடர்பான ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டை ஒட்டி முன்னெடுக்கப்பட்டு வரும் மாதாந்த ஆய்வரங்குத் தொடரின் 5ஆவது நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வரங்கு, கே. கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் “மக்கள் கலை இலக்கிய முன்னோக்கில் ஈழத் தமிழ் சிறுகதைகள்” என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், எழுத்தாளருமான இ. இராஜேஷ்கண்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கில், ஆய்வுரையை ஆய்வாளரும் ஆசிரியருமான சி. ரமேஸ் மேற்கொள்ளவுள்ளார். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. (ஐ)

# மத்திய, மேல் மாகாணங்களில் கால்நடைகளுக்கு நோய் பரவல்

கொழும்பு, ஜூன் 13

கால்நடைகளுக்கு பரவும் தோல் முடிச்சுகளுடன் கூடிய நோய் மேல், மத்திய மாகாணங்களிலும் பரவி வருவதாக அரச கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனை கட்டுப்படுத்த அதிகாரிகள் துரிதமாக செயல்படவேண்டுமென சங்கத்தின் தலைவர் டொக்டர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

“தற்போது இலங்கையில் பரவி வரும் தோல்நோய் நோய் குறிப்பாக வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் வேகமாகப் பரவி தற்போது மேல் மற்றும் மத்திய மாகாணத்துக்கும் பரவியுள்ளது.

இந்தப் பகுதிகளில் நாட்டின் பால் உற்பத்தியில் கவனம் செலுத்தப்படுவதால், பெரும் சிக்கலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நோய் தாக்கத்தின் பின்னர் கால்நடைகளுக்கு நடக்க முடியாமல் போகலாம். உணவு உட்கொள்ளல் குறைகிறது.

இந்த வைரஸ் நோய்களை கட்டுப்படுத்த தடுப்பூசி போடவேண்டும். மத்திய, வடமேற்கு, ஊவா போன்ற பால் உற்பத்தி அதிகம் உள்ள பகுதிகளில் இந்த தோல் நோயை கட்டுப்படுத்த தடுப்பூசி போடப்பட வேண்டும் - என்றும் அவர் மேலும் கூறினார்.

# தந்தையின் தாகம் தீர்க்க இளநீர் பிடுங்க தென்னையில் ஏறிய மகன் விழுந்து பலி!

மட்டக்களப்பு, ஜூன் 13

தந்தையின் தாகம் தீர்ப்பதற்காக இளநீர் பிடுங்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய 21வயது இளைஞன் தவறி விழுந்து உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தந்தையும் மகனும் சித்தாண்டியிலுள்ள மரக்கறி விற்பனை நிலையத்துக்கு சென்றனர்.

தந்தைக்கு உடற்சோர்வும் களைப்பும் ஏற்பட்டிருந்தது. இதனால், அவரின் தாகத்தை தணிக்க அருகிலுள்ள சுமார் 20 அடி உயரமுள்ள தென்னை மரத்தில் இளநீர் பிடுங்குவதற்காக இளைஞர் மரத்தில் ஏறினார். மரத்தின் உச்சியை எட்டிய நிலையில் அவர் தவறி விழுந்தார்.

கீழே விழுந்தவரை உடனடியாக மாவடிவேம்பு மருத்துமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால், அவர் சிகிச்சை பலனின்றி அங்கேயே மரணமானார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.06.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தொல்பொருள் பணிப்பாளரின் பதவி விலகல்?

தொல்பொருள் திணைக்களத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பேராசிரியர் அமுனு மானதுங்க தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்தே அவர் பதவியிலிருந்து விலகியிருக்கின்றார். தொல்பொருள் பகுதிகளென்னும் பெயரில் விகாரைகளுக்கு காணி ஒதுக்கப்பட்ட விவகாரத்தில் ரணில் கேள்வியெழுப்பியிருந்தார். ஒரு கட்டத்தில் "நீர் எனக்கு வரலாறு பற்றி கற்பிக்க முயற்சிக்கின்றீரா", என்றும் கேள்வியெழுப்பியிருந்தார். தொல்பொருள் திணைக்களத்துக்காக காணிகளை அளவிடுவதை நிறுத்துமாறு ரணில் உத்தரவிட்டிருந்தார்.

ஆனால், அதன் பின்னரும்கூட, அவ்வாறான எந்த முடிவையும் திணைக்களம் எடுக்கவில்லையென்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு சூழலிலேயே தற்போது குறித்த பணிப்பாளர் பதவியிலிருந்து விலகுகிறார் என்று அறிவித்திருக்கின்றார். இது தென்பகுதியிலுள்ள பௌத்த அடிப்படைவாதிகளுக்கு மெல்லுவதற்கு அவலை வழங்கியிருக்கின்றது. அடிப்படைவாத சக்திகள் தங்களை ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை பல்வேறு வழிகளிலும் முன்னெடுத்து வருகின்றன - இந்த நிலையில், ரணிலின் தமிழ் மக்களுக்கு சார்பான நடவடிக்கைகளின் காரணமாகவே பணிப்பாளர் பதவி விலகியிருக்கிறாரென சிங்கள தேசியவாதத்தை உயர்த்திப் பிடிக்கும் தரப்புகள் சத்தமிடலாம்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஒரு பணிப்பாளர் விலகுவதன் மூலம் சிங்கள - பௌத்த தேசியவாத நிகழ்ச்சிநிரல் முடிவுக்கு வந்துவிடுமா? சிங்கள - பௌத்த மயமாக்கலை ஓர் அரசியல் ஆயுதமாகவே சிங்கள ஆட்சியாளர்கள் கையாண்டு வந்திருக்கின்றனர். இதில், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீ லங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் எந்தவொரு வேறுபாடும் இல்லை. அவ்வாறு வேறுபாடு இருந்திருந்தால் முன்னைய காலத்தில் விகாரை விரிவாக்கம் நடந்திருக்காது.

கோட்டாபய ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கான செயலணி ஒன்றை உருவாக்கியிருந்தார். அந்த செயலணியில் இருந்தவர்கள் அனைவருமே கடும்போக்கு சிங்கள - பௌத்த தேசியவாத கருத்தியலை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள். புகழ்பெற்ற இந்து ஆலயங்கள் அமைந்திருக்கும் இடங்களிலெல்லாம் பௌத்த விகாரைகள் இருந்தன என்று வெளிப்படையாகக்கூறும் பௌத்த பிக்குகளும் குறித்த செயலணியில் இடம்பெற்றிருந்தனர். இவர்களுக்குப் பக்கபலமாக செயல்படக் கூடியவாறு கிழக்கு மாகாணத்துக்கான சிங்கள - பௌத்த சிந்தனையை முதன்மைப்படுத்தும் ஆளுநர் ஒருவரையும் கோட்டாபய நியமித்திருந்தார். அந்த ஆளுநரையே சில வாரங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க மாற்றியிருந்தார்.

விடயங்களை ஆழமாக நோக்கினால் சிங்கள - பௌத்த நோக்கில் கோட்டாபயவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒருவராக ரணில் தெரிகின்றார். இதன் மூலம் ரணில் இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்கமாட்டார் என்றவாறான பார்வையொன்று முன்வைக்கப்படுகின்றது. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் காலத்துக்குப் பின்னர் என்ன நடக்கும்? அப்போது இந்த மாற்றங்களின் பெறுமதி என்ன? எனவே, இங்கு தேவை சில நபர்களை மாற்றுவது அல்ல - மாறாக, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தேவையற்ற வகையில் மத்திய அரசின் தலையீடுகள் இடம்பெறுகின்றமையை நிறுத்தும் வகையில் அடிப்படையான மாற்றங்களே தேவை.

ரணில் விக்கிரமசிங்க கூறிவரும் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை முன்வைப்பதும் அதன் ஆரம்பமாக மாகாண சபை தேர்தலை நடத்துவதுமே முதன்மையானது. அவ்வாறில்லாது ஒட்டு வேலைகள் செய்வதன் மூலம் முன்நோக்கி பயணிக்க முடியாது.

# இனம், மதம் கடந்து சட்டம் சமமான முறையில் பிரயோகிக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்

*நாட்டில் தனி மனிதர்களும் சமூ கங்களும் அசமத்துவமான முறையில் நடத்தப்படுகிறார்கள் என்ற உணர்வை வலுப்படுத்தும் இன்னொரு சம்பவமாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது அமைந்திருக்கிறது. பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்வதற்கு இடையூறு விழைவித்ததாக அவர் மீது குற்றஞ் சாட்டப் பட்டிருக்கிறது.*

*பொது மைதானம் ஒன்றில் பொன்னம்பலம் தனது ஆதரவாளர்களுடன் நடத்திய கூட்டத்துக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் சிவில் உடையில் வந்த இருவர் தங்களை அடையாளப்ப டுத்த மறுத்ததையடுத்து அவர்களுக்கும் பொன்னம்பலத்துக்கும் இடையில் வாக்கு வாதம் மூண்டது. இந்த சம்பவம் தாங்கள் வேறுபட்ட முறையில் தாங்கள் நடத்தப் படுவதாக தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள உணர்வை மீளக் கிளறியிருக்கிறது.*

ஸ்ரீ ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுவது வழமையான ஒரு நடைமுறை. தங்களை அவமதிப்பதாகவும் அச்சுறுத்துவதாகவும் அந்த நடைமுறை இருப்பதாக அந்த மக்கள் கருதுகிறார்கள்.*

*உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட துப்பாக்கிகளுடனும் கமெராக்களுடனும் சீருடையில் படையினர் பெருமளவில் பிரசன்னமாக இருப்பது அந்த மக்கள் மத்தியில் ஒரு அநாதரவான உணர்வை ஏற்படுத்துகிறது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் அக்கறையாக இருந்தால் அவர்களின் மனங்களை வென்றெடுக்கவேண்டிய அவசியத்தை உணர்த்தும் அறிகுறியாக இந்த நிலைமை இருக்கிறது.*

*நாட்டின் ஏனைய பாகங்களில் வாழும் மக்களை விடவும் வேறுபட்ட முறையில் வடக்கு,கிழக்கு மக்களை நடத்தவேண்டாம் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது. அந்த மக்களும் ஏனைய மக்களைப் போன்று சமத்துவமான உரிமைகளுக்கு உரித்துடையவர்களே.*

*பாராளுமன்றத்தில் உள்ள ஏனைய சமூகங்களின் பிரதிநிதிகள் தவறாக நடந்துகொள்கின்றபோதிலும் மரியாதையாக நடத்தப்படும் அதேவேளை சிறுபான்மை இனத்தவர்களான தமிழ்ச் சமூகத்தின் ஒரு தலைவர் கைதுசெய்யப்படுவது இலங்கையின் அரசியல் கட்டமைப்புக்கு நீண்டகாலமாக பெரும் பாதிப்பாக அமைந்த இனத்துவ பரிமாணத்தை மீண்டும் வெளிக்காட்டி நிற்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலத்தின் கைது பாரபட்சமான முறையில் பிரயோகிக்கப்படுகிறது என்பதன் வெளிப்பாடாகும். இது ஒரு நாடு ஒரு சட்டமா அல்லது ஒரு நாடு இரு சட்டங்களா என்ற கேள்வியைக் கிளப்புகிறது.*


*உலகின் முதன்மையான மனித உரிமைகள் சாதனமான குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன் படிக்கையை* ( International Covenant on Civil and Political Rights -- ICCPR) *நடைமுறைப் படுத்து வதற்கென்று கொண் டவரப்பட்ட சட்டத்தை அர சாங்கம் தவறாக பயன்படுத்தி வருகின்ற போக்கில் இந்த தோற்றப்பாட்டை காணக்கூடி யதாக இருக்கிறது. அதாவது பெரும்பான்மை இனத்தவர் களின் உணர்வுகளை புண்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடு பவர்களுக்கு எதிராக இந்த சட்டம் பயன்படுத்தப்படுகின்ற அளவுக்கு சிறுபான்மை சமூகங்களின் உணர்வுகளை புண்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடு வோருக்கு எதிராக பயன்படுத்தப்படுவதில்லை.*

*சமூக வாழ்வின் சகல அம்சங்களிலும் பாரபட்சம் காட்டப்படாமல் சகலரும் சமத்துவமான முறையில் நடத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு அரசியலமைப்புக்கான 21 வது திருத்தத்துக்கு இசைவான முறையில் சமத்துவம் மற்றும் பன்மைத்துவ ஆணைக் குழு* (Equality and Pluralism Commission) *ஒன்றை நிறுவுமாறு அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம்.*

*நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துமாறும் அரசியலமைப்பின் பிரகாரம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பரவலாக்கப்படக்கூடியதாக அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் இன,மத அடிப்படையில் அரச அதிகாரிகள் அடாத்தான முறையில் நடந்துகொள்ளும் சாத்தியத்தைக் குறைப்பதற்கு சகல சமூகங்களையும் அரவணைக்கும் அணுகுமுறையுடன் சேவைகளை வழங்குவதற்கும் பன்மைத்துவ பண்புகளை விளங்கிக்கொள்வதற்கும் பொலிஸார் உட்பட அரசாங்க அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குமாறும் அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம்.*

*அத்தகைய நிறுவன ரீதியான ஒரு ஏற்பாட்டின் மூலம் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையை அதிகரிக்க முடியும் என்பதுடன் வெளியுலகில் எமது நாட்டின் விழுமியங்களை பிரதிபலிக்கக்கூடியதாகவும் இருக்கும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜுன் - 13 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 30
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : ஏகாதசி




**மேடம்**

குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**மிதுனம்**

கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும்.

**கடகம்**

உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நிம்மதி உண்டாகும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**

குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சமங்களை சொல்லித் தருவார். அதனை செய்து உணர்வீர்கள். அமோகமான நாள்.

**விருட்சிகம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதுபுது சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**

எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூட்சமங்களை உணர்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**

துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால், ஒரே நேரத்தில் 2, 3 வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். உங்களின் மறதியால் பல பிரச்னைகள் வரக்கூடும். சகிப்பு தன்மை தேவைப்படும்.

# இந்தியாவின் பிரதமராக தமிழ்நாட்டவர் வரவேண்டும்!

## உள்துறை அமைச்சர் அமித் ஷா

*சென்னை, ஜுன் 13*

தமிழகத்தில் இருந்து ஒருவர் இந்த நாட்டின் பிரதமராக வரவேண்டும். ஏழை குடும்பத்தில் பிறந்த ஒருவரை பிரதமராக்க வேண்டும். இதை பா. ஜ. கவால் தான் செய்ய முடியும். இதற்கு அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என்று சென்னையில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

தமிழகம் வந்துள்ள அமித்ஷா நேற்றுமுன்தினம் கட்சியினரை சந்தித்தார். அவர்கள் மத்தியில் உரையாற்றிய அமித் ஷா,

சென்னை விமான நிலையத்தைவிட்டு நான் வெளியேறிய போது மின் தடை ஏற்பட்டது. இந்த இருளை கண்டு அச்சப்படத் தேவையில்லை. தமிழகம் இருளில் இருப்பதை இந்த மின் தடை காட்டுகிறது. தமிழகத்துக்கு பா. ஜ. க. வெளிச்சத்தை கொடுக்கும். வரவுள்ள மக்களவை தேர்தலில் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி 25 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் தேர்தலில் பா. ஜ. க. 300 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும். நரேந்திர மோடி மீண்டும் பிரதமர் ஆவார்.

தமிழகத்தில் முதல்வர் ஆக வேண்டும் என்று மட்டும் நினைக்காமல், தமிழகத்தில் இருந்து ஒருவர் இந்த நாட்டின் பிரதமராக வரவேண்டும் என நினைக்க வேண்டும். ஏழை குடும்பத்தில் பிறந்த ஒருவரை பிரதமராக்க வேண்டும். இதை பா. ஜ. கவால் தான் செய்ய முடியும். இதற்கு அனைவரும் உறுதி ஏற்க வேண்டும். கடந்த காலத்தில் தமிழகத்தில் இருந்து 2 பேருக்கு பிரதமர் ஆகும் வாய்ப்பு இருந்தும் நடக்கவில்லை.

பா. ஜ. கவை தமிழுக்கு எதிரான கட்சியாக தி. மு. க. திட்டமிட்டு கட்டமைக்கிறது. தமிழ் வளர்ச்சிக்கு பா. ஜ. க. பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளது. குடிமைப்பணிகள் தேர்வை தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளிலும் எழுத முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. நீட் தேர்வை தமிழில் எழுத முடியும் என்ற நிலையை பா. ஜ. க. கொண்டு வந்துள்ளது - என்றார். (ஐ)

# மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லாதது தி. மு. கவின் தவறு

## பா. ஜ. கவின் குஷ்பு சாடல்

*சென்னை, ஜுன் 13*

மத்திய அரசின் திட்டங்களை தமிழக மக்களிடம் கொண்டு சேர்க்காதது முதல்வரின் தவறு என தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு குற்றஞ்சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

தமிழகத்தைப் பொறுத்த வரை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் வருகை பா. ஜ. கவினரை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. கூட்டணியில் இருந்தபோதும் கட்சிக்காக தனிப்பட்ட முறையில் பணியாற்றக் கூடாதா என்ன? கூட்டணி கட்சியினர் அவர்களுக்கான பணியை செய்வர். எங்களது கட்சியை வலுப்படுத்துவதற்காக, கட்சியினரை உற்சாகமாக வைத்திருப்பதற்கான பணிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

9 ஆண்டுகாலம் பா. ஜ. க. தமிழகத்துக்கு என்ன செய்தது எனக் கேட்கும் முதல்வர், எய்ம்ஸ் மட்டுமே கணக்கில் கொண்டு பேசி வருகிறார். கடந்த 9 ஆண்டுகளில் மத்திய அரசு கொண்டு வந்த திட்டங்கள் தமிழர்களுக்கு சென்று சேர்ந்திருக்க வேண்டும். அது அவ்வாறு சென்றடையவில்லை என்றால் நான் தி. மு. க. அரசைதான் குற்றம் சாட்டுவேன்.

அது முதல்வரின் தவறுதான். மக்களுக்காக கொண்டு வந்த திட்டங்கள் குறித்து தி. மு. க. அரசுக்கு தெரியவில்லை, அப்படி தெரிந்திருந்தும் மக்களுக்கு அதனை அவர்கள் கொடுக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். முதல்வர் தமிழகத்துக்காக என்ன செய்திருக்கிறார்? என்று கேள்வி எழுப்பினார். (ஐ)

# நிர்வாக திறனற்ற தி. மு. க. ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்கள் இல்லை!

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

*சென்னை, ஜுன் 13*

நிர்வாகத் திறனற்ற இரண்டாண்டு கால தி. மு. க. ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,”

சேலத்தில் மக்கள் நலத் திட்டங்களை திறந்து வைத்துப் பேசும்போது நிர்வாகத் திறமையற்ற முதல்வர், மக்கள் பணி செய்யவே நேரம் போதவில்லை என்றும் மக்கள் விரோதிகளைப் பற்றி பேச ஏது நேரம் எனவும் தனது திருவாய் மலர்ந்திருக்கிறார்.

யார் தமிழகத்துக்கு துரோகம் செய்தவர்கள் என்று தமிழக மக்களுக்கு நன்கு தெரியும். மக்கள் நலனைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், குடும்ப நலனை மட்டுமே மையப்படுத்தி ஆட்சி செய்பவர்கள் யார்? தலைமைப் பொறுப்பில் அப்பா, மகன் பேரன் இவர்களுக்குப் பிறகு கொள்ளுப் பேரனுக்கு மகுடம் என்று வாரிசு அரசியல் செய்பவர்கள் யார்? இவர்களுக்கு சளைத்தவர்கள் நாங்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில், மாவட்டம் தோறும் அப்பா, பிறகு மகன் என்று தேர்தலில் நின்ற தி. மு. கவின் மாவட்டக் குறுந்தலைவர்கள் யார்? வாழையடி வாழையாக தி. மு. க. என்ற நிறுவனத்தை நாங்கள்தான் நடத்துவோம் தொண்டர்கள் என்பவர்கள் எல்லாம் பல்லக்கு தூக்கிகள்தான் என்று கொக்கரிக்கும் மனோபாவம் கொண்ட, மன்னர் பரம்பரையைத் தோற்கடிக்கும் தி. மு. க. அரசின் சர்வாதிகார மனோபாவத்தை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

அதுமட்டுமல்ல, தி. மு. க. தோழமைக் கட்சிகளுக்கு செய்யும் துரோகத்தை, தி. மு. கவின் கட்சிப் பத்திரிகையில் கூட்டணிக் கட்சியினரை படுகேவலமாகத் தாக்கி எழுதுவதன் மூலமும் தி. மு. க. நிர்வாகிகள் உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணி தர்மத்தின்படி தோழமைக் கட்சிகளுக்கு அரசுப் பதவிகளை (தலைவர், துணைத் தலைவர்) வழங்காமல் பட்டை நாமம் போட்டதையும், அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஓராண்டில் நடைபெற உள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தோல்வி உறுதி என்பதை அறிந்த நிலையில், கடந்த 18 மாதங்களுக்கும் மேலாக இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சிகளோடும் மெகா கூட்டணி அமைத்து 2024 பாராளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர்கொள்வது பற்றியே சிந்திக்கும் திமுக அரசின் முதல்வருக்கு தமிழக மக்களைப் பற்றி சிந்திக்க நேரமேது?- என்றார். (ஐ)

# மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்படக்கூடாது!

## வலியுறுத்துகிறார் ரில்வின் சில்வா



**கொழும்பு, ஜூன் 13**

**மக்களைக் கஷ்டங்களுக்கு உள்ளாக்கி அவர்களின் ஆர்ப்பாட்டங்களை தடை செய்ய அரசாங்கம் மேற்கொள்ளும் தந்திரமான வழிமுறைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- மக்கள் தமது கஷ்டங்களை தாங்கிக்கொள்ள முடியாமல் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தும்போது, பல்வேறு தடைகளை விதிப்பது ஜனநாயக விரோத செயல்.

இதனால், அதனை உடனடியாக நிறுத்த வேண்டும். நாட்டில் அமைதியான ஆர்ப்பாட்டங்களை நடத்த இடமளிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த கோரிக்கையை விடுப்பதில் பயனில்லை.

இதனால், மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிக்குமாறும் அதற்கு தடைகளை விதிக்க வேண்டாம் எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்- என்றார். (அ)

## ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தும் திட்டத்தை கைவிட்டது அரசு

கொழும்பு, ஜூன் 13

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தும் யோசனையை அரசு கைவிட்டுள்ளதென நம்பகரமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி 2024 ஓகஸ்ட் மாதத்துக்கு பின்னரே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளதென தெரியவருகின்றது.

2024 முற்பகுதியில் அவசர ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு முன்னதாக திட்டமிட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகளும் திரைமறைவில் இடம்பெற்றுவந்தன. இந்நிலையிலேயே அம்முடிவு கைவிடப்பட்டுள்ளது. (அ)

## சுவிஸில் தலைமறைவாகிய இலங்கை முப்பாய்ச்சல் வீரர்

கொழும்பு, ஜூன் 13

சுவிற்சர்லாந்தில் நடைபெறும் உலக உள்ளக விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள சென்ற இலங்கையின் தேசிய முப்பாய்ச்சல் சம்பியனான கிரேஷன் தனஞ்சய தலைமறைவாகியுள்ளார்.

இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்லும் இலங்கை வீரர்கள், வீராங்கனைகள் தலைமறைவாகி வருவது குறிப்பிடத்தக்கது.

### ஓ.எல் மாணவர்கள் அட்டகாசம்

## பாடசாலையில் சேதங்களை திருத்த பெற்றோர் ஒப்புதல்!





கொழும்பு, ஜூன் 13

மகுல்தமன மகா வித்தியாலயத்தில் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த மாணவர்களின் பெற்றோர், சேதப்படுத்தப்பட்ட உடைமைகளுக்குத் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு இணங்கியுள்ளதாக மனம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புலாகலை கல்வி வலயத்திற்குட்பட்ட மகுல்தமன மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் குழுவொன்று பாடசாலையின் மின் உபகரணங்கள், மின்விசிறிகள் மற்றும் மலசலகூடக் கதவுகளை உடைத்துள்ளதாக அண்மையில் மனம்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பரீட்சை முடிந்து வீடுகளுக்குச் செல்லவிருந்த மாணவர்கள், பாடசாலைச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## டெங்கு நோயாளர்களில் 25 வீதமானோர் மாணவர்

கொழும்பு, ஜூன் 13

இந்த வருடத்தின் நேற்றுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 42,000க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் அவர்களில் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவு இது தொடர்பில் தெரிவிக்கையில்-

டெங்கு நோயிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரும் பெற்றோர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அந்த வகையில் கடந்த 2 தினங்களாக பாடசாலை மற்றும் பாடசாலையை அண்டிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாடசாலையின் சுற்றாடல் பகுதிகள் துப்புரவு செய்யப்படும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 42,184 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதுடன் மேல் மாகாணத்திலேயே அதிக டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அந்த வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் பல டெங்கு எச்சரிக்கை வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதுடன் அவ்வாறு 61 சுகாதார மருத்துவ அதிகாரி நிர்வாகப் பிரிவுகள் இனங்காணப்பட்டு எச்சரிக்கை வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன- என தெரிவிக்கப்பட்டது. (அ)

## தங்கம் கடத்திய அலி சப்ரி எம். பியிடம் விளக்கம் கோர சபாநாயகர் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 13

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பிரமுகர் வெளியேறல் பகுதியூடாக தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை கடத்தி வந்து மாட்டிக்கொண்ட, பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிடம், அது தொடர்பில் பாராளுமன்றில் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கான நியாயங்களை முன் வைக்குமாறு விளக்கம் கோரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அத்துடன் அலி சப்ரி ரஹீம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் மற்றும் பல அரசியல் கட்சிகள் சபாநாயகரிடம் செய்த முறைப்பாடுகளை பரிசீலித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த சம்பவம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை சுங்கத் திணைக்களத்திடம் இருந்து இருந்து பெற்றுக்கொள்ளுமாறு பாராளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீரவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு உரித்தான அதி முக்கிய பிரமுகர் விசேட வரப்பிரசாதத்தை இரத்து செய்ய தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதற்கு முன்னர் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்ற அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## ரயில் கடவைகளில் விபத்துகளை தடுக்க வருகின்றது ஈ-கேற் திட்டம்

கொழும்பு, ஜூன் 13

அபாயகரமான தொடருந்து விபத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இலங்கை ரயில் திணைக்களம், நாடு முழுவதும் விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

அதன்படி, ரயில் வலையமைப்பில் நாடளாவிய ரீதியிலுள்ள சுமார் 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் ஈ-கேற் அமைப்பை அமைக்க உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ரயில் திணைக்களத்தின் அறிவுறுத்தலின்பேரில் அரச அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இந்த ஈ-கேற் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொடகம ரயில் நிலையத்திற்கு அருகில் ஈ-கேற் பரீட்சார்த்த திட்டம், அண்மையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

## பொரளையில் 35 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 13

பொரளை பொலிஸ் பிரிவுக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட கூட்டு நடவடிக்கையின் மூலம் பிடியாணை நிலுவையில் உள்ள இருவர் உட்பட மொத்தம் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார், விசேட அதிரடிப்படை மற்றும் இலங்கை இராணுவத்தினர் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். (அ)

## காரைநகரில் அதிரடிப் படையினரை தாக்கிய சந்தேக நபர் கைதாகினார்!

யாழ்ப்பாணம், ஜூன் 13

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை தாக்கிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த காரைநகர் தாதா என அழைக்கப்படும் கயன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப் படையினரை தாக்கிய குற்றச்சாட்டில் நீண்ட நாட்களாக தேடப்பட்டு கயன் என்ற சந்தேக நபர் கட்டார் நாட்டுக்கு போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தப்பிச் செல்ல முற்பட்டபோது நேற்றுக் காலை யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டார்

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி காரைநகர் ஊரிப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் 8 கிலோ கஞ்சாவுடன் குறித்த சந்தேக நபரை கைது செய்ய முற்பட்டபோது அவர் அதிரடிப்படையினரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றார்.

குறித்தசந்தேக நபருக்கு ஏற்கனவே மல்லாகம், ஊர்காவற்துறை நீதிமன்றங்களில் கஞ்சா வழக்குகள் நிலுவையில் உள்ளன. பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர் என தேடப்பட்டு வந்த குறித்த நபர் கட்டார் நாட்டுக்கு செல்வதற்காக தனியார் பஸ் ஒன்றில் யாழ்ப்பாண பஸ் நிலையத்துக்கு வந்த போது யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து போலியான கடவுச்சீட்டுகள் இரண்டும், கைத்தொலைபேசிகள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன. (அ)

# வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கையர்களுக்கு நீதி வழங்க தவறியுள்ளது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஜூன் 13

வெளிநாட்டில் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த மற்றும் விபத்திற்குள்ளான இலங்கையர்களுக்கு இழப்பீடு மற்றும் நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் வெளிவிவகார அமைச்சு தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிவிவகார அமைச்சு, கவனக்குறைவாகவும் மெதுவாகவும் செயற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தனது கண்காணிப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கை தொடர்பில் ஆராய்ந்தே தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும்போது உயிரிழந்தவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் 2012 ஆம் ஆண்டு விபத்திற்குள்ளாகி முற்றிலும் ஊனமுற்ற நபரொருவருக்கு இழப்பீடு கிடைப்பதில் 10 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான வழக்குப் பதிவும் அமைச்சின் அலட்சியப் போக்கினால் பல ஆண்டுகளாக காணாமல்போனதாகவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு குவைத்தில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்தபோது உயிரிழந்த பெண்ணொருவரின் உடல் உறுப்புகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரியவந்தும் குறித்த மரணம் இடம்பெற்று 10 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரையில் சட்ட வைத்திய அறிக்கை பெறப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு தூதரக சேவைக்காக வெளிநாடு சென்றுள்ள பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான பாதுகாப்பு வைப்புத்தொகை, 5 கோடியே 56 இலட்சத்து 19 ஆயிரத்து 842 ரூபா பயன்படுத்தப்படாத வீடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

1 கோடியே 22 இலட்சத்து 5 ஆயிரத்து 875 ரூபா வைப்புத் தொகையை 20 வருடங்களாக மீளப் பெறுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் கூறுகிறது.

2019 ஆம் ஆண்டு மின்சார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 1 கோடியே 60 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனம் மற்றும் 2020 ஆம் ஆண்டு மோசடி செய்யப்பட்ட இரண்டு கோடியே 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐந்து வாகனங்கள் குறித்த தகவல்கள், நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற 1583 அமெரிக்க டொலர்கள் திருட்டு சம்பவத்திற்கு இன்று வரை தீர்வு காணப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது. (அ)

# கொழும்பு துறைமுக நகரில் சர்வதேச பல்கலைக்கழகம்

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு துறைமுக நகரத்தில் மருத்துவ பீடத்துடன் கூடிய சர்வதேச பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான கேள்வி கோரலை கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ பீடம் தவிர, பொறியியல், வணிக மேலாண்மை, நிதி மற்றும் வங்கி தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் பட்டப் படிப்புகள் தொடங்கப்படும்.

கொழும்பை பிராந்தியத்தில் கல்வி நிலையமாக மாற்றும் அரசாங்கத்தின் இலக்கை அடைவதற்கான வசதிகளை வழங்குவதும் இந்தப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பாகும்.

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் போன்று சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யவேண்டும் என்று துறைமுக நகர ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகம் ஆறு மாதங்களுக்குள் நிறுவப்பட உள்ளது. (அ)

# கோட்டாபயவைச் சுற்றி வந்து நான் அரசியல் செய்யவில்லை

## கூறுகிறார் சரித ஹேரத் எம்.பி



**கொழும்பு, ஜூன் 13**

**தான் தனிப்பட்ட முறையில் கோட்டாபய ராஜபக்சவை சுற்றி வந்தவர் அல்லர் என ஆளும் கட்சியில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.**

**வியத்மக என்ற அமைப்பில் தனக்கு உறுப்பினர் பதவி கூட வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் தனிப்பட்ட முறையில் கோட்டாபயவைச் சுற்றி இருந்ததில்லை. நான் கோட்டாபயவுடன் இணைந்து அரசியல் செய்தவன் அல்லன்.

கோட்டாபய அரசியலுக்க வரும் முன்னரே நான் அரசியலில் ஈடுபட்டிருந்தேன்.

நான் சுதந்திரக் கட்சி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் இணைந்து அரசியல் செய்தேன்.

கோட்டாபய இருந்த குழுவில் நான் இருந்திருக்கவில்லை.

வியத்மக ஒரு அமைப்பு. அந்த அமைப்பு எனக்கு உறுப்பினர் பதவி கூட வழங்கவில்லை-என்றார். (அ)

# ஒளி - ஒலிபரப்புச் சட்டமூலத்தால் 33 ஊடக நிறுவனங்களுக்கு ஆபத்து!

கொழும்பு, ஜூன் 13

பாராளுமன்றத்தில் ஒளி-ஒலிபரப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் 33 ஊடக நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் 6 மாதங்களுக்குள் இரத்தாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு இரத்தானால் புதிய அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டும் என்றும், அப்படி புதிய அனுமதிப் பத்திரத்தை வழங்குவதா, இல்லையா என்று ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐவர் கொண்ட ஆணைக்குழுவே தீர்மானிக்கும் என்றும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

மேலும், ஊடகவியலாளர்களைச் சிறை அனுப்புவதற்கும், ஊடக நிறுவனங்களில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் இந்தச் சட்டமூலம் வழிவகுக்கும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

# இலாபம் தரும் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்க நாமல் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 13

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தற்போது இலாபம் ஈட்டிக்கொண்டிருக்கும் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும் முயற்சிகள் குறித்து தீவிர ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நனடத்தில் இயங்கும் நிறுவனங்களை இலாபகரமான வணிகங்களாக மாற்றுவதற்கு அவற்றை தனியார்மயமாக்குவது பற்றி சிந்திக்கக்கூடியதாக இருக்கும் அதேவேளை, ஏற்கனவே இலாபம் ஈட்டும் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என அவர் கூறியுள்ளார்.

இலாபகரமான அரச நிறுவனங்களை தனியார்மயமாக்க ஒரு முடிவு எடுக்கப்பட்டிருந்தால், அத்தகைய முடிவின் பின்னணியில் உள்ள காரணத்தைப் புரிந்துகொள்வது அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.(அ)

# அனுராதபுரம் வைத்தியசாலையில் 6 மாதங்கள் பழுதடைந்து காணப்படும் எம். ஆர். ஐ. இயந்திரம்

கொழும்பு, ஜூன் 13

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் காந்த அதிர்வு அலை வரைவு இயந்திரம் (எம்.ஆர்.ஐ) ஆறு மாதங்களாக பழுதடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, கடந்த ஜனவரி மாதம் 5ஆம் திகதி முதல் செயலிழந்துள்ளதால் அநுராதபுரம் பிரதேச நோயாளர்கள் பாரிய அவதிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தனியார் வைத்தியசாலைகளில் எம்.ஆர்.ஐ பரிசோதனை நடத்த 25ஆயிரம் ரூபாய் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரை செலவழிக்க வேண்டும் என நோயாளர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இயந்திரம் பழுதடைந்ததால், நோயாளர்கள் காத்திருப்புப் பட்டியல் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு மே மாதம் வரை நீட்டிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து நோயாளிகளுக்கு பரிசோதனைக்கான திகதிகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது.

பராமரிப்புப் பணிகளில் ஏற்படும் காலதாமதம் குறித்து விசாரணை நடத்தி, தாமதக் கட்டணம் வசூலிக்கவேண்டும். எனினும், தொடர்புபட்ட அதிகாரிகள், நோயாளிகளை தனியார் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி, அதன் மூலம் தனிப்பட்ட பலன்களை பெற்று வருகின்றனர்.

எம்.ஆர்.ஐ பரிசோதனை நரம்பு மண்டலத்தில் உள்ள நோய்களைக் கண்டறிதல், முதுகெலும்பு தொடர்பான நரம்பு மண்டலத்தின் நோய்களைக் கண்டறிதல், புற்றுநோய் நிலைகளைக் கண்டறிதல், இதயத்திற்கு இரத்த வினியோகத்தில் உள்ள தடைகளைக் கண்டறிதல் மற்றும் மூட்டுகளுடன் தொடர்புடைய தசைகள் நோய்களைக் கண்டறிதல் போன்றவற்றுக்கு உதவி வருகிறது.

குறித்த இயந்திரம் பழுதடைந்துள்ள காரணத்தினால், நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவதோடு நரம்பியல் அறுவைச் சிகிச்சையை தாமதமடைந்து வருகிறது.

தற்போது அரச வைத்தியசாலைகளில் 13 காந்த அதிர்வு அலை வரைவு இயந்திரம் (எம்.ஆர்.ஐ) உள்ளதாகவும் அதில் பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையிலுள்ள இயந்திரம் 2 வருடங்களுக்கு முன்னர் பழுதடைந்துள்ள காரணத்தினால் 11 இயந்திரங்கள் மட்டுமே இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, ராகம போதனா வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை ஆகியன எம்.ஆர்.ஐ பரிசோதனைக்காக நீண்ட காலமாக காத்திருப்புப் பட்டியல்களை வைத்துள்ளதுடன், அது ஒரு வருடம் வரை நீடிப்பதைக் காணமுடிகிறது. (அ)

# நல்லிணக்கம் ஏற்படவேண்டுமெனில் முதலில் எம்.பிக்கள் திருந்தவேண்டும்

## அமைச்சர் பந்துல அறிவுரை

கொழும்பு, ஜூன் 13

**‘இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர். நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உருவெடுக்குமா? என்ற சந்தேகம் இதனால் எழுந்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**



பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்ச்சண்டைகள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உருவெடுக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர். அவர்களின் கருத்துக்கள் நாட்டின் நீதித்துறைக்கு சவால் விடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

அதியுயர் சபையான பாராளுமன்றத்திலும் சபை விதிமுறைகளை மீறி மக்கள் பிரதிநிதிகள் கூச்சலிடுகின்றனர்.

இனவாத, மதவாதக் கருத்துக்களை அள்ளி வீசுகின்றனர். நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமெனில், முதலில் மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் திருந்தவேண்டும்-என்றார்.

(அ)

# பொருளாதார நெருக்கடியால் சிறுவர்கள் கூலித்தொழிலாளிகளாக மாறும் அபாயம்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை கருத்திற்கொண்டு சிறுவர்கள் கூலித்தொழிலாளர்களாக பயன்படுத்தப்படும் அபாயம் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், பாடசாலைகளை விட்டு இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், பாடசாலைக்கு தொடர்ச்சியாக அனுப்பாமல் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகளவில் அவதானிக்க முடிவதாகவும் அந்த அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் தற்போதைய சட்டத்தின்படி, 16 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அவர்களின் வாழ்க்கை, சுகாதாரம், கல்வி அல்லது தார்மீக வளர்ச்சிக்கு ஆபத்தில்லாத பணிகளில் மட்டுமே அமர்த்த முடியும்.

மேலும் அந்த சிறுவர்களை பாதுகாப்பற்ற வேலைகளில் அமர்த்துவதும், இரவு நேரங்களில் பணிக்கு அமர்த்துவதும் சட்டவிரோதமானதாகும்.

எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படும் அபாயம் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

(அ)

# மாநாட்டுக்காக வெளிநாடு செல்வதற்கு இரு அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு!

கொழும்பு, ஜூன் 13

கிழக்கு ஆசிய நாடு ஒன்றுக்கு மாநாட்டுக்காகச் செல்வதற்கு, தமது அமைச்சின் கீழ்வரும் நிறுவனமொன்றின் உயர் அதிகாரிகள் இருவருக்கு இலங்கையின் நிதி அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் காரணமாக இந்தப் பயணத்தை அங்கீகரிக்க முடியாது என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் வணிக வகுப்பில் அதிகாரிகள் வெளிநாடு செல்வதற்கான விமான அனுமதிச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு அரச நிதியை வெளியிட முடியாது என்பதையும் அமைச்சு தெரியப்படுத்தியுள்ளது.

தாங்கள் வணிக வகுப்பில் பயணம் செய்ய விரும்பவில்லை என்றும், சொந்த வளங்களைப் பயன்படுத்தி பொருளாதார வகுப்பில் பயணிக்க திட்டமிட்டுள்ளதாக அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், அத்தகைய பயணம் தேவையற்றது என்ற அடிப்படையில், அவர்களின் மேல்முறையீடும் நிராகரிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(அ)

# பொகவந்தலாவையில் உயிர் மாய்த்த மாணவன்!

கொழும்பு, ஜூன் 13

பொகவந்தலாவை -கெம்பியன் பகுதியில் 10 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டார்.

அவரது பெற்றோர் தொழிலுக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில், குறித்த சிறுவன் கழிவறையில் நேற்று முன் தினம் மாலை தனது உயிரை மாய்த்துக்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவனுக்கு, மேலும் இரண்டு சகோதரர்கள் உள்ள நிலையில், அவர்கள் குறித்த சந்தர்ப்பத்தில் வீட்டில் இருக்கவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் பிரதே பரிசோதனைக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சுற்றாடல் மாசுபடுவதனாலேயே தொற்றுநோய்கள் ஏற்படுகின்றன

## கூறுகின்றார் சுற்றாடல் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 13

சுற்றாடல் மாசுபடுவதன் விளைவாலேயே, சகல தொற்று நோய்களும் ஏற்படுவதாக சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கடந்த வாரம் சுற்றாடலில் ஆதிக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பில் மக்களின் அவதானத்தை ஈர்க்கச் செய்யும் மரநடுகை தினம், காற்று மாசடைவதற்கான காரணிகளை குறைக்கும் தினம், சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக்கும் தினம், உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கும் தினம், நீர் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாக்கும் தினம், நிலைபேறான காணி முகாமைப்படுத்தல் தினம் மற்றும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் முகாமைப்படுத்தல் தினம் முதலான தினங்களைப் பிரகடனப்படுத்தி அதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை சுற்றாடல் அமைச்சு செயற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

எமது நாட்டில் பாரிய உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய டெங்குநோயை முற்றாக அழிக்க, சுகாதாரத்துறையுடன் இணைந்து மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ள அரசாங்கம் நடிவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த அவர்,

இம்முறை பிளாஸ்ரிக் மாசுபடுவதனை வெற்றிகொள்வோம் எனும் திட்டத்தை ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

இதற்கமைவாக எமது நாட்டிலும் எதிர்காலச் சந்ததியினரின் நலன் கருதி பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் உற்பத்தியாளர்கள் முதல் அவற்றைப் பயன்படுத்துபவர்கள் வரை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சேருவில படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவு



திருமலை, ஜூன் 13

முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை ஏற்றிவந்த 21 பேர் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை- சேருவில படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவு தினம் திருகோணமலை ஈச்சிலம்பற்று -பூநகர் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர் தூவி, தீபமேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வை குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவுகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்களை சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றிருந்தது.

(அ)

# வவுனியாவில் மாடுகள் திருட முயன்றவர்களை மடக்கிப்பிடித்து நையப்புடைத்த பொதுமக்கள்!

வவுனியா, ஜூன் 13

வவுனியா சமயபுரம் கிராமத்தில் மாடுகளை திருட முயன்ற இரு நபர்களை மடக்கிப்பிடித்த பொதுமக்கள் குறித்த இரு நபர்களையும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

நேற்று காலை 6.00 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமயபுரம் கிராமத்தில் கடந்த சில மாதங்களாக கால்நடைகள் திருடப்படுகின்றமை அதிகரித்த வண்ணமே காணப்பட்டதுடன் கால்நடைகளைக் களவாடுபவர்கள் பொதுமக்களினால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலும் கையளிக்கப்பட்டனர்.

எனினும் அப்பகுதியில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமேயிருந்தது.

இந்நிலையில் நேற்று காலை 6 மணியளவில் சமயபுரம் விநாயகர் வித்தியாலய வீதியில் மாட்டைக் களவாட முயன்ற இரு நபர்களை பொதுமக்கள் நையப்புடைத்து வாகனம் ஒன்றில் கட்டி வைத்தமையுடன் அவர்களை நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்தனர்.

பின்னர் மக்கள் மாட்டைக் களவாட முயன்ற இரு நபர்களையும் வாகனத்தில் ஏற்றி வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர். இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கையில்,

எமது கிராமத்தில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளதுடன், இரவில் நிம்மதியாக உறங்குவதற்கு கூட முடியவில்லை.

பல தடவைகள் கால்நடைகளை களவாடுபவர்களை பிடித்துக் கொடுத்தும் நெளுக்குளம் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதனால் நாங்கள் திருடர்களை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைப்படைத்துள்ளோம்-என்றனர். (அ)

ரேஹான் பசல்

# உலகையே ஆட்சி செய்ய வேண்டுமென்ற அலெக்சாண்டரின் ஆசை நிறைவேறாமல் போனது ஏன்?

கிரேக்க தத்துவஞானியும் வரலாற்றாசிரியருமான புளூடார்ச் அலெக்சாண்டரின் ஆளுமையை விவரிக்கும்போது அவர் அழகாக இருந்தாலும் முகம் சிவப்பாக இருந்தது என்றார்.

அன்றைய சராசரி மாசிடோனியர்களைவிட உயரம் குறைந்தவராகவே அலெக்சாண்டர் இருந்தார். ஆனால், இது போர்க்களத்தில் அவருக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அலெக்சாண்டர் தாடி வைத்துக்கொண்டதில்லை. அவரது கண்ணங்கள் ஒட்டியும், தாடை சதுர வடிவிலும் இருந்தன. அவரது கண்கள் கடுமையான உறுதியைப் பிரதிபலித்தன.

மார்கஸ் கர்டியஸ் அலெக்சாண்டரின் வாழ்க்கை வரலாறான 'அலெக்சாண்டரின் வரலாறு' என்ற நூலில் பின்வறுமாறு எழுதினார்.

"அலெக்சாண்டரின் தலைமுடி பொன்னிறமாகவும் சுருளாகவும் இருந்தது. அவருடைய கண்களின் நிறம் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டிருந்தது. இடது கண் சாம்பல் நிறத்திலும் வலது கண் கருப்பு நிறத்திலும் இருந்தன.

ஒருவர் அலெக்சாண்டரின் முன்னால் போய் நின்றால் அந்தக் கண்களைப் பார்த்தே பயந்துவிடுவார். அவரது கண்களில் அவ்வளவு சக்தி இருந்தது. அலெக்சாண்டர் எப்போதும் ஹோமர் எழுதிய 'தி இலியாட் ஆஃப் தி கேஸ்கெட்' என்ற புத்தகத்தை உடன் எடுத்துச் சென்றார். தூங்கும் போதும்கூட அதைத் தலையணைக்கு அடியில் வைத்திருப்பார்."

'அலெக்சாண்டர் ஒருபோதும் தேக இன்பங்களில் ஆர்வம் காட்டவில்லை, மற்ற விஷயங்களில் அவரைப் போன்ற தைரியமும் பயமற்ற தன்மையும் கொண்டவர்கள் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். குழந்தை பருவத்திலிருந்தே அவர் பெண்களிடம் மரியாதையாக நடந்துகொண்டார்," என்று அலெக்சாண்டரின் வாழ்க்கை வரலாறான 'தி லைஃப் ஆஃப் அலெக்சாண்டர் தி கிரேட்' இல் புளூடார்ச் குறிப்பிடுகிறார்.

"அடிமை பெண்கள், காமக்கிழத்திகள், மனைவிகள் தனிப்பட்ட சொத்தாகக் கருதப்பட்ட காலம் அது."

மேலும், 'அலெக்சாண்டருக்கு பெண்கள் மீது விருப்பத்தை ஏற்படுத்துவதற்காக அவருக்கு சேவைகளை செய்வதற்கு மிகவும் அழகான பெண்ணான காலிக்ஸேனாவை அவரது தாய் ஒலிம்பியா நியமித்தார்.

ஆனால், இது அலெக்சாண்டரிடம் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. உடலுறவும் உறக்கமும் உடல் அழியும் என்பதையே அவருக்கு நினைவூட்டியதாக அவர் ஒப்புக்கொள்கிறார்," என்றும் புளூடார்ச் தனது புத்தகத்தில் கூறியுள்ளார்.



### 23 வயதில் தொடங்கிய பயணம்

இளவரசர் அலெக்சாண்டர் கிமு 334இல் தனது 23 வயதில் உலகை வெற்றி காண்பதற்கான தனது பயணத்தை கிரேக்கத்தின் மாசிடோனியாவில் இருந்து தொடங்கினார்.

ஈரான் வழியாக, 10,000 மைல்கள் பயணித்து சிந்து நதிக்கரையை அடைந்த அலெக்சாண்டரின் படையில் ஒரு லட்சம் வீரர்கள் இருந்தனர்.

கிமு 326இன் தொடக்கத்தில், அலெக்சாண்டர் ஈரானில் இருந்தபோது, இந்தியாவுக்கு அருகிலுள்ள நகரங்களின் மன்னர்களுக்கு தனது கட்டுப்பாட்டை ஏற்கும்படி தூதர்களை அனுப்பினார்.

அலெக்சாண்டர் காபூல் பள்ளத்தாக்கை அடைந்தவுடன், இந்த மன்னர்கள் அவரைச் சந்திக்கத் தொடங்கினர். அவர்களில் ஒருவர் இந்திய நகரமான தக்ஸிலாவின் இளவரசர் அபி.

தனது விசுவாசத்தைக் காட்டுவதற்காக, அலெக்சாண்டருக்கு அவரது பயணத்தில் உதவியாக இருப்பதற்காக 65 யானைகளை அபி பரிசளித்தார்.



தனது எதிரியான போரஸுக்கு எதிரான போரில் அலெக்சாண்டர் தனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதற்காகவே தக்ஸிலா அலெக்ஸாண்டருக்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுத்தது.

### சிந்து நதியை நோக்கி முன்னேறிய அலெக்சாண்டர்

"தக்ஸிலாவின் இளவரசர் வேண்டுமென்றே இந்தியாவை அடையும் கதவை அலெக்சாண்டருக்கு திறந்துவிட்டார். அலெக்சாண்டரின் படைக்கு 5000 இந்திய வீரர்களையும் 65 யானைகளையும் அவர் வழங்கினார். மேலும், அவரது இளம் தளபதி சாண்ட்ரோகுப்டோஸும் அலெக்சாண்டருடன் இணைந்தார்," என்று மார்கஸ் கர்டியஸ் குறிப்பிடுகிறார்.

அலெக்சாண்டர் 2 மாதங்கள் தக்ஸிலாவில் தங்கியிருந்து அவர்களின் உபசரிப்புகளை ஏற்றுக்கொண்டார்.

"இந்த நேரத்தில் அலெக்சாண்டர் தனது ராணுவத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். கைபர் கணவாயை தங்கள் வசம் கொண்டு வருவதற்காக ஹெபஸ்டின் தலைமையில் ஒரு பெரிய ராணுவத்தை கைபர் கணவாய் வழியாக அனுப்பினார்" என்று அலெக்சாண்டரின் வாழ்க்கை வரலாறான "அலெக்சாண்டர் தி கிரேட்" என்ற நூலை எழுதியவரான பிலிப் பிரீமேன் குறிப்பிடுகிறார்.

பழங்குடியின கிளர்ச்சியாளர்களை நசுக்குவதற்கும், மிக முக்கியமாக, சிந்து நதியை விரைவில் அடைந்து, தனது ராணுவம் ஆற்றைக் கடக்க ஒரு பாலம் கட்டுவதற்கும் அலெக்சாண்டர் இந்த நடவடிக்கையை எடுத்தார்.

இந்தப் பயணத்தில் அலெக்சாண்டரின் படையுடன் ஏராளமான இந்திய மன்னர்கள், பொறியியலாளர்கள் ஆகியோரும் அணிவகுத்துச் சென்றனர். இந்துகுஷ் கிழக்குப் பகுதியில் உள்ள பழங்குடியினரை தன் கட்டுப்பாட்டிற்கின்கீழ் கொண்டு வருவதற்காக அலெக்சாண்டர் ஒரு சுற்றுவட்டப் பாதையைத் தேர்ந்தெடுத்து அதன்வழியாகப் பயணித்தார்.

### போரஸ் உடனான வெற்றிக்கு பின் அலெக்சாண்டர் நாடு திரும்பியது ஏன்?

அலெக்சாண்டர் வழியில் சந்தித்த மன்னர்கள் அனைவரும் அவர் முன் சரணடையவில்லை. அவர்களின் கோட்டைகளை அலெக்சாண்டர் கைப்பற்றினார்.

இந்தப் பயணத்தின்போது அலெக்சாண்டரின் கையை ஓர் அம்பு தாக்கிய சம்பவமும் நிகழ்ந்தது. ஒருமுறை, அலெக்சாண்டரும் அவரது படையினரும் ஓர் இடத்தில் முகாமிட்டு ஓய்வெடுத்துக்கொண்டு இருந்தனர். அப்போது பழங்குடியின கிளர்ச்சியாளர்கள் திடீரென அங்கு வந்து தாக்குதல் நடத்தினர்.

அருகிலிருந்த குன்றின்மீது ஏறி அலெக்சாண்டர் படையினர் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டனர். அலெக்சாண்டர் தப்பியோடிவிட்டார் என்று கிளர்ச்சியாளர்கள் நினைத்தனர். ஆனால், குன்றின் மீதிருந்து இறங்கிவந்து அலெக்சாண்டரின் படையினர் திரும்பத் தாக்கினர். இதையடுத்து, கிளர்ச்சியாளர்கள் தங்கள் ஆயுதங்களை கீழே போட்டு சரணடைந்தனர்.

தனது ராணுவத்தில் சேர வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவர்களுக்கு அலெக்சாண்டர் உயிர் பிச்சை வழங்கினார். அவர்களும் முதலில் சம்பந்தம் தெரிவித்தனர், எனினும் சிலர் அங்கிருந்து ஓட முயன்றபோது, அலெக்சாண்டர் அவர்களைக் கொல்ல உத்தரவிட்டார்.

அலெக்சாண்டர் பாசிரா நகரத்தை அடைந்தபோது, அங்குள்ள வீரர்கள் மற்றும் குடிமக்கள் அனைவரும் நகரத்தை விட்டு வெளியேறி ஓர்னஸ் என்ற மலையில் ஏறியதைக் கண்டார்.

இந்த மலையைச் சுற்றிலும் ஆழமான அகழி இருந்தது, உச்சிக்குச் செல்ல ஒரேயொரு வழிதான் இருந்தது. தானியங்களை அதிக அளவில் விளைவிக்கக்கூடிய ஒரு சமவெளி இருந்தது. அங்கும் போதிய தண்ணீர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஹெர்குலிஸால்கூட அந்த மலையில் ஏற முடியவில்லை என்று அலெக்சாண்டரிடம் உள்ளூர் வழிகாட்டி கூறினார். அலெக்சாண்டர் அதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டார்.

அலெக்சாண்டரின் வீரர்கள் சண்டையிட்டு மலையின் உச்சியை அடைந்தனர். இந்தத் தாக்குதலால் வியப்படைந்த பஜிரா நகரின் வீரர்கள் மறுநாள் சரணடைய முன்வந்தனர். எனினும், இரவே அவர்கள் தப்பிக்க முயன்றனர்.

இதை முன்பே கணித்திருந்த அலெக்சாண்டர் தயாராக இருந்தார். அவர்கள் மீது தாக்குதல் நடத்தினார். பலரும் பள்ளங்களில் விழுந்து உயிரிழந்தனர்.

### சரணடைய மறுத்த போரஸ்

சிந்து நதியை அடைய அலெக்சாண்டரின் படையினருக்கு 20 நாட்கள் எடுத்துக்கொண்டது. அங்கு, நதியின் மீது படகுகளின் உதவியுடன் பாலம் கட்டுவதற்கு தக்ஸலாவின் மன்னன் உதவினார்.

சிந்து நதிக்கரையில் வாழும் மக்கள் ஆற்றின் ஓட்டத்திற்கு இணையான மரப் படகுகளை இணைத்து ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது எப்படி என்பதை அறிந்திருந்தனர்.

போரஸ் பெரிய யானைகளை உள்ளடக்கிய ஒரு பெரிய படையைக் கொண்டிருப்பதை அலெக்சாண்டரின் உளவாளிகள் அவருக்குத் தெரிவித்தனர்.

போரஸின் ராணுவத்தை தன்னால் தோற்கடிக்க முடியும் என்று அலெக்சாண்டர் நம்பினார், ஆனால் பருவமழை தொடங்கியதால் அதைச் செய்வது எளிதல்ல.

அலெக்சாண்டரின் ராணுவம் நிச்சயமாக மழையில் சண்டையிடும் அனுபவத்தைக் கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் மிகப்பெரிய வெப்பத்தையும் எதிர்கொண்டனர். எனவே, தன் எல்லைக்கு வந்து தன்னை சந்தித்து தன் உத்தரவை ஏற்கும்படி போரஸுக்கு அலெக்சாண்டர் செய்தி அனுப்பினார்.



எனினும், இதை ஏற்கமாட்டேன் என்று அலெக்சாண்டருக்கு போரஸ் பதிலளித்தார். தனது ராஜ்யத்தின் எல்லையில் அவரைச் சந்திக்கத் தயாராக இருந்தார்.

அலெக்சாண்டரும் அவரது வீரர்களும் பல நாட்கள் அணிவகுத்து ஜீலம் நதியை அடைந்தனர். போரஸின் ராணுவம் ஜீலமின் மறுபுறத்தில் இருந்தது. அலெக்சாண்டர் ஆற்றின் வடக்கு கரையில் முகாமிட்டார். போரஸ் கண் பார்வையில் படாமல் ஆற்றைக் கடப்பதற்கான இடத்தை அவர் தேடிக்கொண்டிருந்தார்.

போரஸை குழப்புவதற்காக, அவர் தனது படையை ஆற்றின் கரைக்கு வெகு தொலைவில் அனுப்பினார்.

அலெக்சாண்டர் தனது வீரர்களை ஒரே இடத்தில் வைத்திருக்கவில்லை. சில நேரம் மேற்கு நோக்கியும் சில நேரம் கிழக்கு நோக்கியும் அவர்கள் சென்றனர். இதற்கிடையில் ஆற்றங்கரையில் நெருப்பு மூட்டி சத்தம் போட ஆரம்பித்தனர். ஆற்றின் மறுகரையில் இருந்த போரஸின் வீரர்கள் அலெக்சாண்டரின் வீரர்களின் நடமாட்டத்துடன் பழகி, அவர்களை உன்னிப்பாகக் கண்காணிப்பதை நிறுத்தினர்.

அலெக்சாண்டரை போலல்லாமல், போரஸின் ராணுவம் ஒரே இடத்தில் நின்றது. ஏனெனில் யானைகளை அவர்கள் முன்னணியில் நிறுத்தியிருந்தனர். மேலும் அவற்றை மீண்டும் மீண்டும் அங்கும் இங்கும் நகர்த்துவது மிகவும் கடினமாக இருந்தது.

அலெக்சாண்டர் அருகிலுள்ள வயல்களில் இருந்த தானியங்களைத் தனது முகாமுக்குக் கொண்டு வர உத்தரவிட்டார். போரஸின் உளவாளிகள் இந்தச் செய்தியைக் கொடுத்தபோது, அலெக்சாண்டர் மழைக்காலம் முடியும் வரை அங்கேயே இருக்க முடிவு செய்துள்ளார் என்று போரஸ் எடுத்துக் கொண்டார்.

இதற்கிடையில் பலத்த புயல் வீசத் தொடங்கியது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அலெக்சாண்டர் தனது வீரர்களை ஆற்றைக் கடக்கச் செய்தார். இருப்பினும், இந்த முயற்சியில் மின்னல் காரணமாக அலெக்சாண்டரின் பல வீரர்களும் இறந்தனர்.

போரஸ் இதை அறிந்ததும், அலெக்சாண்டரின் வீரர்களை ஆற்றைக் கடக்கவிடாமல் தடுக்க முயன்றார். போரஸ் ஒரு துணிச்சலான, திறமையான தளபதியாக இருந்தாலும், அலெக்சாண்டரின் நன்கு பயிற்சி பெற்ற வீரர்களை எப்படி எதிர்கொள்வது என்பது அவருக்கு பிரச்னையாக இருந்தது.

### போரஸ் உடனான வெற்றிக்கு பின் அலெக்சாண்டர் நாடு திரும்பியது ஏன்?

போரஸின் படையில் நிறைய யானைகள் இருந்தது அவருக்குச் சாதகமாகப் பார்க்கப்பட்டது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# ஒடிஷா ரயில் விபத்தின் மறுபக்கம்: பள்ளியில் அடுக்கி வைக்கப்பட்ட உடல்கள் அச்சத்தில் நடுங்கும் குழந்தைகள்!

இந்தியாவில் அண்மையில் ஒடிஷா மாநிலத்தில் 3 ரயில்கள் மோதிய விபத்து நேரிட்டு ஒரு வாரம் கடந்துவிட்ட பிறகும், அங்கே துயரம் கொஞ்சமும் குறையவில்லை.

அந்தத் துயரத்தோடு சேர்த்து, விபத்து நடந்த பகுதியில் வாழும் மக்களை இன்னொரு விஷயமும் தூங்கவிடாமல் செய்துகொண்டிருக்கிறது.

கடந்த 2ஆம் தேதி இரவு, மரண ஓலங்களும், உதவி கோரும் அழுகுரல்களுமாக விபத்து நடந்த இடம் மயானபூமியைவிடக் கொடூரமாக இருந்தது.

மீட்புப் படைகளும் அப்பகுதி மக்களும் சேர்ந்து பாதிப்புக்கு உள்ளானவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இறந்தவர்களின் உடல்களை அருகிலிருந்த அரசுப் பள்ளியான பஹாநாகா மேல்நிலைப் பள்ளியில் வைத்திருந்தனர்.

இந்தக் கோர விபத்தின் தாக்கம் அப்பகுதியில் இருந்தவர்களை மீளமுடியாத அதிர்ச்சியிலும், துயரத்திலும் ஆழ்த்தியிருக்கிறது.

**சடலங்கள் வைக்கப்பட்ட பள்ளிக்கு வர அஞ்சும் குழந்தைகள்**

இந்தத் துயர்மிகு சம்பவத்தின் வேதனைக்கு நடுவே, அதுதொடர்பான இன்னொரு விஷயமும் அந்த ஊர் மக்களைத் தூக்கமிழக்கச் செய்துகொண்டிருக்கிறது. இறந்தவர்களின் உடல்கள் வைக்கப்பட்டிருந்த அதே பள்ளிக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்புவதில் பெற்றோர் தயக்கம் காட்டுவதாகக் கூறப்பட்டது.

மாணவர்களும் அப்பள்ளியின் வளாகத்திற்கு மீண்டும் செல்ல அச்சம் கொண்டுள்ளதாகக் கூறப்பட்ட நிலையில்,



ஏஎன்ஐ செய்தி முகமையிடம் பேசிய பள்ளி மாணவர்கள் சிலர், ‘பயங்கரமான ரயில் விபத்துக்குப் பிறகு, எங்கள் பள்ளி முழுவதும் உடல்கள் நிறைந்திருந்தது. எங்கள் பள்ளி வளாகத்தில் சிதறியிருந்த அந்த உடல்களின் பயமுறுத்தும் காட்சிகளை மறக்க முடியாது,” என்றனர்.

பாஹாநாகா பள்ளியில் 567 மாணவர்கள் படிக்கின்றனர். ரயில் விபத்து நடந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளது.

இதில் உளவியல் ரீதியான பிரச்னைகள் இருப்பதாக ஆசிரியர்களும் தெரிவித்த நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரமிளா ஸ்வைன், ‘ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் பள்ளியில் வைக்கப்பட்டிருந்ததால் பள்ளிக்கு வரவே




மாணவர்கள் அஞ்சுகின்றனர். அவர்களுடைய பயத்தைப் போக்க பூஜைகள் மற்றும் சில சடங்குகளை நடத்த பள்ளி நிர்வாகம் திட்டமிட்டது,” என்றார்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளதால் விபத்தில் இறந்தவர்கள் முதலில் இந்தப் பள்ளி கட்டடத்தில் வைக்கப்பட்டு பின்னர் பிணவறைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

விபத்து ஏற்பட்டு நூற்றுக்கணக்கான சடலங்கள் கிடந்த கட்டடத்திற்கு குழந்தைகளை அனுப்ப பெற்றோர்கள் தயாராக இல்லை. குழந்தைகளும் அங்கு ஆன்மா இருப்பதாகக் கூறி அச்சத்தில் வர மறுக்கின்றனர்.

**குழந்தைகளை பள்ளிக்கு வர வைக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?**



இதுகுறித்து ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திடம் பேசிய இந்தப் பள்ளியின் ஆசிரியர் ஒருவர், “ரயில் விபத்திற்கு முன், குழந்தைகள் இந்தப் பள்ளிக்கு மகிழ்ச்சியுடன் வந்தார்கள். ஆனால் இந்த விபத்துக்குப் பிறகு குழந்தைகள் பள்ளிக்கு வர மறுக்கின்றனர்.

இங்கு இறந்தவர்களின் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆன்மா இருக்கிறது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இங்கு ஒன்றும் இல்லை என்பதை குழந்தைகளுக்குப் புரிய வைக்கவேண்டும்,” என்று தெரிவித்தார்.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட பள்ளிக்கு ஆய்வு மேற்கொள்ளச் சென்ற பாலாசோர் மாவட்ட ஆட்சியர் தத்தாத்ராயா பௌசாஹேப் ஷிண்டே, பள்ளி நிர்வாகக் குழு உறுப்பினர்கள், தலைமையாசிரியர், பிற பணியாளர்கள் மற்றும் உள்ளூர் மக்களைச் சந்தித்து பேசினார்.

பின்னர், ஏஎன்ஐ செய்தி முகமைக்குப் பேட்டியளித்த அவர், “மாநில அரசின் உத்தரவுப்படி, இந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டேன்.

எப்படியிருந்தாலும் இது பழைய கட்டடம் தான். அதுவும் ஆச்பெஸ்டாஸ் கூரையுடன் உள்ளது. மாணவர்கள் அச்சம் அடையாத வகையில், புதிய பள்ளி வளாகம் சீரமைக்கப்படும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கவுன்சிலிங் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்,” என்று கூறினார்.

அதன்படி, பஹாநாகா மேல்நிலைப் பள்ளியின் சில பகுதிகளை இடித்து மறுசீரமைப்பு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ●

# உலகையே ஆட்சி செய்ய வேண்டுமென்ற...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக பிலீப் பிரீமேன் எழுதும்போது, “எனினும், யானைகளுடன் எப்படிப் போரிடுவது என்பதை அலெக்சாண்டரின் படையினர் அப்போது அறிந்திருந்தனர்.

யானையைச் சுற்றி வளைத்து ஈட்டி மூலம் தாக்கினர். அதேநேரத்தில், யானையின் கண்ணைக் குறிவைத்து அம்பு எய்யப்பட்டது. கண்ணில் அம்பு தாக்கியது, கட்டுப்படுத்த முடியாமல் அங்கும் இங்கும் ஓடிய யானை தனது தரப்பைச் சேர்ந்தவர்களையே தாக்கியது,” எனக் குறிப்பிடுகிறார்.

“அலெக்சாண்டர் தனது வீரர்களை போரஸின் வீரர்களுக்கு இடது மற்றும் வலதுபுறமாக அனுப்பி, அவர்களை முன்னால் சென்று போரஸின் வீரர்களைப் பின்னால் இருந்து தாக்கும்படி செய்தார். இந்தக் கடுமையான போரில், இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.”

‘இந்தப் போர் பஞ்சாபில் ஜீலம் நதிக்கரையில் உள்ள ஜலால்பூரில் நடந்தது. அலெக்சாண்டர் தனது பியூசிபேலஸ் குதிரையின் மீது சவாரி செய்து கொண்டிருந்தார். அப்போது குதிரையின் மீது அம்பு பாய்ந்து அது இறந்தது.

அலெக்சாண்டருக்கு தனது குதிரை இறந்ததை நினைத்து வருத்தப்படக்கூட நேரம் கிடைக்கவில்லை. அவர் மற்றொரு குதிரையை எடுத்துக்கொண்டு போரைத் தொடர்ந்தார். போரஸின் வீரர்கள் அழுத்தத்துக்கு உள்ளானதும் அலெக்சாண்டரின் வீரர்கள் பின்னால் வந்து அவர்களைத் தாக்கி அவர்கள் தப்பிக்கும் வழியை அடைத்தனர்.”

எனினும் மாபெரும் யானையின் மீதிருந்து போரஸ் தொடர்ந்து போரிட்டார். அவரது தைரியத்தைப் பாராட்டும்விதமாக, ஆயுதத்தை கிழே போட்டுவிட்டு சரணடைந்தால் உயிருடன் விடுவதாக ஓம்பியஸ் என்ற தூதுவர் மூலம் அலெக்சாண்டர் செய்தி அனுப்பினார்.

எனினும், தூது சென்றவரை போரஸ் தனது ஈட்டியால் கொல்ல முயன்றார். இதையடுத்து, வேறு ஒரு தூதுவர் மூலம் அலெக்சாண்டர் மீண்டும் செய்தி அனுப்பினார். அவர் போரஸை சமாதானது செய்து ஆயுதத்தைக் கீழே போடச் செய்தார்.

இதுகுறித்து பிலிப் பிரீமேன் எழுதுகையில், ‘இரண்டு மன்னர்களும் சந்தித்தபோது, போரஸின் யானை, காயமடைந்த போதிலும், முழங்காலில் இறங்க அவருக்கு உதவியது. போரஸின் ஆறடி உயரத்தில் அலெக்சாண்டர் மிகவும் ஈர்க்கப்பட்டார். பிடிபட்ட பிறகு, போரஸை எப்படி நடத்த வேண்டும் என்று அலெக்சாண்டர் கேட்டார். போரஸ் உடனே பதிலளித்தார், ‘ஒரு ராஜா மற்றொரு ராஜாவுக்கு என்ன செய்வாரோ அப்படி.’

‘போரஸ் தனது காயத்துக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக போர்க்களத்தை விட்டு வெளியேற அலெக்சாண்டர் அனுமதித்தார். சில நாட்களுக்குப் பிறகு, போரஸுக்கு தான் கைப்பற்றிய நிலத்தை மட்டுமல்ல, அருகிலுள்ள சில கூடுதல் நிலங்களையும் திருப்பித் தந்தார். அலெக்சாண்டரின் உதவியாளர்கள், அவர் அப்படி செய்வதை விரும்பவில்லை.”

அதே நேரத்தில், அலெக்சாண்டரின் ராணுவம் தங்களது கொல்லப்பட்ட வீரர்களின் இறுதிச் சடங்குகளைச் செய்தது. கொல்லப்பட்ட குதிரையின் நினைவாக, அலெக்சாண்டர் போர்க்களத்திற்கு அருகில் ஒரு புதிய நகரத்தை நிறுவி அதற்குத் தனது குதிரையின் பெயரான பியூசிபேலஸ் என்று பெயரிட்டார்.

“போரஸ் போராடும் நிலையில் இருக்கும் வரை, அவர் அலெக்சாண்டருடன் கடுமையாகப் போராடினார்,” என்று அலெக்சாண்டரின் வாழ்க்கை வரலாற்றாசிரியர் புளூடார்ச் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

**மாசிடோனியா திரும்ப விரும்ப அலெக்சாண்டரின் படையினர்**

அலெக்சாண்டர் இதைத் தாண்டி கங்கைக் கரைக்குச் செல்ல விரும்பினார், ஆனால் அவரது வீரர்கள் தயங்கினர்.

ஒட்டுமொத்த ராணுவத்தின் சார்பாகப் பேசிய ஒரு வயதான சிப்பாய், ‘எல்லா ஆபத்தையும் எதிர்கொண்டு உங்களோடு இவ்வளவு தூரம் வந்திருப்பது எங்களுக்கு மரியாதை அளித்துள்ளது. ஆனால் இப்போது நாங்கள் சோர்வாக இருக்கிறோம்,” என்றார்.

“இந்த நேரத்தில் எங்கள் தோழர்கள் பலர் களத்தில் கிடக்கின்றனர். இன்னும் உயிருடன் இருப்பவர்களின் உடல்களில் இந்வாயி பயணத்தின் அடையாளங்கள் உள்ளன.”

“நாங்கள் எங்கள் பெற்றோரைப் பார்க்கவும், எங்கள் குழந்தைகளை மீண்டும் கட்டிப்பிடிக்கவும் விரும்புகிறோம். நாங்கள் அனைவரும் மாசிடோனியாவுக்கு திரும்பிச் செல்ல விரும்புகிறோம்.”

“அதற்குப் பிறகு நீங்கள் மீண்டும் புதிய தலைமுறை மக்களுடன் மற்றொரு பயணத்தை மேற்கொள்வீர்கள். எங்களைப் பொறுத்தவரை, இதற்கு மேல் செல்ல முடியாது.”

மூத்த சிப்பாய் பேசி முடித்ததும் சக வீரர்கள் கரகோஷம் எழுப்பி அவரை வரவேற்றனர். ஆனாலும், அவர் பேசியதை அலெக்சாண்டர் ரசிக்கவில்லை.

கோபமாக எழுந்த அவர் தனது குடிலுக்கு திரும்பினார். அடுத்த மூன்று நாட்களுக்குத் தனக்கு நெருக்கமானவர்களிடம் அவர் பேசவில்லை.

தாங்கள் செய்தது தவறு என்று தன்னிடம் வீரர்கள் மன்னிப்புக் கேட்க வருவார்கள் என்று அலெக்சாண்டர் நினைத்தார். ஆனால், அப்படி நடக்கவில்லை. கங்கையைச் சென்றடையும் தனது கனவு நிறைவேறாது என்பதை அவர் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டது.

பின்னர், வீரர்கள் அனைவரையும் ஒன்று கூட்டிய அலெக்சாண்டர், தாயகத்துக்குத் திரும்பிச் செல்லப் போவதாக அறிவித்தார்.

கிழக்கு திசையை கவலை தோய்ந்த முகத்துடன் பார்த்த அலெக்சாண்டர், தங்களின் நாடான மாசிடோனியாவுக்கு திரும்பிச் சென்றார். ●

# தவறிழைத்தது கோட்டாபயவே பொதுஜன பெரமுன கட்சியல்ல

## அந்தக் கட்சியின் பொது செயலர் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 13

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அரச தலைவரான கோட்டாபய ராஜபக்ஷ தவறிழைத்தாரே தவிர, பொதுஜன பெரமுன தவறிழைக்கவில்லை. வெகுவிரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறும். ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

களுத்துறை - அளுத்கமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அடிமட்ட மக்கள் ஆதரவுடன் சிறீ லங்கா பொதுஜன பெரமுன 2016ஆம் ஆண்டு உதயமானது. நல்லாட்சி அரசாங்கத்தின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 2028ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் என தொடர்ந்து மக்கள் ஆணையை உறுதிப்படுத்தினோம்.

30 வருடகால பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த ராஜபக்ஷர்களை பெரும்பாலான மக்கள் ஒரு போதும் புறக்கணிக்கமாட்டார்கள். ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்களே தவிர நாட்டுக்கு தீ வைக்கவில்லை.

கோவிட் பெருந்தொற்றின் பின்னரான காலப்பகுதியில் பொருளாதார பாதிப்பு அரசியல் நெருக்கடியாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு மகிந்த ராஜபக்ஷவின் உருவப் படத்தை வைத்து அரசியலுக்கு வந்த தரப்பினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

2022ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதிக்கு பின்னர் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உட்பட ராஜபக்ஷர்கள் அரசியலில் இருந்து விலகி விடுவார்கள் என நாட்டுக்கு தீ வைத்த மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் கருதினார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை நிறுவியுள்ளோம்.

வெகுவிரைவில் ஏதாவதொரு தேர்தல் இடம்பெறும் அப்போது எமது பலத்தை நாங்கள் மீண்டும் உறுதிப் படுத்துவோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் ரீதியில் தவறிழைத்தாரே தவிர, பொதுஜன பெரமுன தவறிழைக்கவில்லை. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் அமைப்போம் - என்றார்.

(ஐ)

# தார்மீக ஊடகங்கள் ஒலி - ஒளிபரப்பு சட்டத்துக்கு பயப்பட தேவையில்லை

## ஆஷூ மாரசிங்க சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 13

அரசாங்கம் தயாரித்து வரும் ஒலி, ஒளிபரப்பு சட்டமூலம் ஊடாக நாட்டில் சிறந்த ஊடக தர்மத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் தார்மீக ஊடக செயல்பாடுகளில் ஈடுபட்டுவரும் ஊடக நிறுவனங்கள் இந்த சட்டமூலத்துக்கு பயப்பட தேவையில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒலி, ஒளிபரப்பு சட்டமூலம் தொடர்பாக நாட்டில் தற்போது பலதரப்பினர்கள் மத்தியிலும் கருத்தாடல்கள் இடம்பெற்ற வருகின்றன. இது சிறந்த நடவடிக்கையாகும். எந்தவொரு நாட்டினதும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாட்டின் ஜனநாயக தூண்களில் இன்று ஊடகம் முக்கிய இடத்தில் இருக்கிறது. அப்படியானால் நாடொன்றை கட்டியெழுப்ப ஊடகத்தின் பணி உயர்ந்த நிலையில் இருக்க வேண் டும். அதற்கு ஏற்றவகையில் ஊடகத்துக்கு என ஒழுக்க நெறி ஒன்று இருக்கவேண்டும்.

ஊடக ஒழுக்க நெறி தொடர்பாக 2016 இல் நாங்கள் கதைக்க ஆரம்பித்தோம். இது தொடர்பாக பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் தீவிரமாக ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். அந்த வகையில் தற்போது மீண்டும் அதன் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறோம். எந்தொரு விடயத்தை ஒளிபரப்பு செய்யும்போதும் அது தொடர்பில் பூரண பொறுப்பை அந்த ஊடகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று தனிநபர், சமூக பாதுகாப்பை கருத்திற் கொண்டே அவை இடம்பெற வேண்டும். ஆனால் அவ்வாறான ஊடக நெறியை பின்பற்றும் ஊடகங்களை எங்களால் காண முடியாமல் இருக்கிறது. கொலை சம்பவம் ஒன்று இடம்பெற்றால் எமது நாட்டு ஊடகங்கள் செயற்படும் விதத்தையும் வெளிநாட்டு ஊடகங்கள் செயற்படும் விதத்தையும் பார்த்தால் எமக்கு அந்த வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளலாம்.

அதனால் ஊடக தார்மீகம் இருக்கவேண்டும். அதனை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக தண்டனை வழங்க வேண்டும். மக்களுக்கு உண்மையை வெளிப் படுத்தும் ஊடக சுதந்திரம் இருக்கவேண்டும். அதற்காக எதை வேண்டுமானாலும் ஒளிபரப்பும் சுதந்திரம் வழங்க முடியாது. இன்று நாட்டில் இருப்பதும் அவ்வாறான சுதந்திரமாகும்.

அதேபோன்று அரசாங்கம் தற்போது தயாரித்துவரும் ஒலி,ஒளிபரப்பு சட்டமூலம் அனுமதிக்கப்பட்டால் பல ஊடக நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படும் என சிலர் தெரிவித்து வருகின்றனர்.

தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் அமைச்சருக்கு எந்த வேளையும் ஊடக நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் அனுமதியை இரத்தச்செய்யலாம். அத்துடன் இந்த சட்ட மூலம் அனுமதிக்கப்பட்டால் நாடு கொரியாவின் நிலைக்கு செல்லும் என பிரசாரம் செய்து வருகின்றனர்.

எனவே, சட்டமூலம் இன்னும் முழுமையாக தயாரிக்கப்படாத நிலையிலேயே சிலர் இவ்வாறான பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஊடக பிரதானிகள் மற்றும் சிவில் அமைப்பினருடன் கலந்துரையாடிய பின்னரே இது தொடர்பான சட்ட மூலம் தயாரிக்கப்படும். அத்துடன் தார்மீக ஊடக செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் ஊடக நிறுவனங்கள் இந்த சட்டத்துக்கு பயப்பட தேவையில்லை - என்றார்.

(ஐ)







# கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை உகந்தமலையில் நேற்று காலை திறப்பு

## ஆளுநர் செந்தில் தொண்டமான் பங்கேற்றார்

**அம்பாறை, ஜூன் 13**

**வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான குமுண தேசிய பூங்கா ஊடான காட்டுப்பாதை நேற்று திங்கட்கிழமை கழுகு மலை பத்து பாடி திறந்து வைக்கப்பட்டது.**



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முன்னிலையில் காலை 7.30 மணியளவில் பாதை திறக்கப்பட்டது.

இம் முறை காட்டுப்பாதையூடாக சுமார் 45 ஆயிரம் பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று காலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூசை நடத்தி ஆசியுரை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து காலை 7 மணியளவில் காட்டுப் பாதை திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.என்.டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட அரசாங்கஅதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க உள்ளிட்ட யாத்தியர்கள் பல அன்பர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அனிருத்தனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆகியோரின் ஏற்பாட்டில் காட்டுப் பாதை திறந்து வைக்கப்பட்டது.

முதல் நாளிலேயே சுமார் 2000 பாதயாத்திரீகர்கள் பயணித்தனர்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த ஜெயா வேல்சாமி தலைமையிலான மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

சுமார் 6 நாட்கள் இந்த பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

இன்று திறக்கப்பட்ட காட்டுப்பாதை இம்மாதம் 25 ஆம் தேதி மூடப்படுகிறது.

கதிர்காம கொடியேற்றம் எதிர்வரும்19 ஆம் திகதி நடைபெற உள்ளது. ஜூலை மாதம் 04ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும்.

(அ)

# அம்பாறை உலமா சபை பாராட்டு

நிந்தவூர்,ஜூன் 13

இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான க.பொ.த. உயர் தர தனியார் வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்காமல், 30ஆம் திகதி வரை தாமதப்படுத்துவதற்கு கல்முனை மற்றும் அக்கரைப்பற்று மாநகர சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொண்ட நடவடிக்கையை அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை வரவேற்றுள்ளதுடன் பாராட்டும் தெரிவித்துள்ளது.

உலமா சபையின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் தலைமையில் இடம்பெற்றபோது இவ்வாறு பாராட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அதன் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல். நாசிர்கனி தெரிவித்தார்.

மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு உள்ளூராட்சி மன்றங்கள் மிகவும் கரிசனையுடன் விடுத்திருக்கின்ற அறிவுறுத்தல்களை தனியார் கல்வி நிலையங்கள் ஏற்று, செயற்பட வேண்டும் எனவும் இது விடயத்தில் அனைத்து தாப்பினரும் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க முன்வரவேண்டும் எனவும் அம்பாறை மாவட்ட உலமா சபை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

அதேவேளை, இக்கால சூழலில் க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களை ஆத்மீக ரீதியில் நெறிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை உலமா சபையின் கிளைகள், பள்ளிவாசல் நிர்வாகங்கள், தஃவா அமைப்புகள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டும் என மாவட்ட உலமா சபை வலியுறுத்துவதாகவும் அதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கு மாவட்ட உலமா சபை தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-06)

# வேலோடுமலையில் இருந்து ஆயிரம் வேல் தாங்கிய பக்தர்களின் கதிர்காம யாத்திரை இன்று ஆரம்பம்!

காரைதீவு, ஜூன் 13

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை வரலாற்றில் முதல் தடவையாக இன்று செவ்வாய்க்கிழமை வேலோடுமலையிலிருந்து ஆரம்பமாகின்றது.

இந்த மாபெரும் வேல் யாத்திரையை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகசிறி தியாகராஜா ஆசிரியர் வேல்சாமியாக இருந்து இவ்வருடம் முதல் யாத்திரையை தலைமையேற்று நடத்துகிறார்.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்தில் இருந்து 1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரையாக, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடு மலையில் இருந்து "பாத யாத்திரை" தொடங்குகிறது.

வேலோடுமலையிலிருந்து சிறப்பு பூசைகள் சகிதம் வேல் யாத்திரை ஆரம்பமாகி சித்தாண்டி முருகன் ஆலயம் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை தரிசித்து உகந்தை மலை முருகன் ஆலயத்தை பஸ்களில் சென்றடைவர். இன்றிரவு அங்கு அடியார்கள் தங்கியிருப்பர்.

நாளை புதன்கிழமை உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து இவ் ஆறு நாட்கள் வேல் யாத்திரை முறைப்படி ஆரம்பமாகின்றது. 19ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் கதிர்காமத்தைச் சென்றடையும்.

அனைத்து நாட்களும் யாத்திரீகர்கள் அனைவருக்கும் மூன்றுவேளை சாத்வீக உணவும், இரண்டு வேளை தேனீரும் இலவசமாக வழங்கப்பட இருக்கிறது.

(அ)

# கரையொதுங்கிய சடலம் அடையாளம் காணப்பட்டது

மட்டக்களப்பு, ஜூன் 13

ஏறாவூர் பொலிஸ் பிரிவு புன்னக்குடா கடலில் நேற்று முன்தினம் காலை 09.45 மணிக்குக் கரையொதுங்கிய சடலம், சவுக்கடி கடலில் மீன்பிடியில் ஈடுபடும் தளவாயை பகுதியைச் சேர்ந்த தங்கராசா விஜயன் (வயது-45) என மீனவர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளை ஏற்று, சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ். எம். நஸீர், சடலத்தை பார்வையிட்டு, உடற்கூற்று பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை அனுப்பி வைத்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் காலை 06 மணியளவில் சவுக்கடி கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற இவர் வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் தேடிய போது, சவுக்கடி கடலில் தொழிலுக்குச் சென்று அன்று மதியம் 12 மணிக்கு கரைக்கு வந்துவிட்டதாவும், அதன் பின்னர் பிற்பகல் 01 மணியளவில் புன்னக்குடாவில் இவரை கண்டதாகவும் பலரும் தெரிவித்திருந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

மது போதைக்கு அடிமையான இவர், இரு திருமணம் முடித்திருந்தும் இரு மனைவிகளையும் விட்டுப் பிரிந்து தாய் வீட்டிலேயே பல வருடமாக வசித்து வந்திருக்கிறார்.

(அ)

# சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

நிந்தவூர், ஜூன் 13

கிழக்கு ஷோசியோ அபிவிருத்தி அமைப்பின் வேண்டுகோளின் பேரில் பிரன்ஷிப் அமைப்பின் தலைவர் ரிகாஷ் ஹாஜியின் அனுசரணையில் சம்மாந்துறை அல்-அர்ஷத் மகா வித்தியாலயத்தின் விசேட தேவையுடைய மாணவர் பிரிவுக்கு இரு சக்கர நாற்காலிகள் இரண்டு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.ஏ.றஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு ஷோசியோ அபிவிருத்தி அமைப்பின் தலைவர் வாஹிதா முகைதீன் இம்தியாஸ், தவிசாளர் இம்தியாஸ் காரியப்பர் மற்றும் ரிகாஷ் ஹாஜி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு இவற்றை வழங்கினர்.

இதில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ.



எம்.சிராஜ், உதவி அதிபர் யூ.எல். நூஹுல்லாஹ், விஷேட பிரிவின் தலைவர் எம்.ஐ.றியாத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

(அ-06)

# வைத்தியர்கள் தாதியர்களுக்கான பயிற்சிப் பட்டறை கல்முனையில்



கல்முனை, ஜூன் 13

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன மற்றும் சுகாதார அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் கல்முனை சுகாதாரப் பிராந்தியத்தில் கடமையாற்றும் தெரிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான இருநாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறையின் இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை துறைசார் நிபுணர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் பல்வேறு விரிவுரைகள் இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் அவர்களின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம் மாஹிரினால் இணைப்புச் செய்யப்பட்ட இப்பயிற்சி நெறியில் வைத்திய உத்தியோகத்தர்களும் தாதிய உத்தியோகத்தர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

(அ)

# கடலில் இணையக் கேபிள் அமைப்பதில் அமெரிக்கா - சீனா இடையே முரண்பாடு!

நியூயோர்க், ஜூன் 13

**அமெரிக்கா மற்றும் சீனாவின் மேலாதிக்கப் போட்டி தற்போது கடல் தளத்தை எட்டியுள்ளது. தகவல் புரட்சியின் பாலங்களான கடலில் இணைய கேபிள்கள் தொடர்பாக இந்த இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.**

தொலைபேசிகள், வீடியோ உரையாடல்கள், மின்னஞ்சல்கள் என இணையமே சர்வதேச தகவல் தொடர்பு கட்டமைப்பின் ஆதாரம் இருந்து வருகிறது.

உலகின் 95 சதவீத தரவுகள் தற்போது கடலுக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள 9 மில்லியன் மைல் நீளமுள்ள பைபர் ஒப்டிக் கேபிள்கள் மூலம் மாற்றப்படுகின்றன.

தற்போது அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் கடலில் கேபிள் அமைப்புகள் பிரச்னையை ஏற்படுத்தியுள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் பனிப்போர் ஏற்படும் சூழலை உருவாக்கியுள்ளது.

நீண்ட காலமாக, இந்த கடலுக்கடியில் கேபிள் கட்டமைப்புகள் அமெரிக்க நிறுவனங்களின் கைகளில் உள்ளது.

அண்மையில் சீனாவில் இருந்து ஒரு கேபிள் கூட்டமைப்பு கடலுக்குள் அமைக்கப்பட்டதில் இருந்து பிரச்னை ஆரம்பமாகியது.

ஆசியா, மேற்கு ஆசியா மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் வகையில் சிங்கப்பூரிலிருந்து பிரான்ஸுக்கு கடலுக்கடியில் கேபிள் கட்டமைப்பை அமைப்பதற்காக அமெரிக்காவை தளமாகக் கொண்ட சப்கொம் கொன்சோட்டியம் கூட்டமைப்புடன் போட்டியிட சீன நிறுவனமான எச்.எம்.என் முன்வந்துள்ளது.

சீனாவின் தொலைத்தொடர்பு நிறுவனமான ஹூவாவி, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து எச்.எம்.என். கூட்டமைப்பில் இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் கடலுக்கு அடியில் உள்ள இணைய கேபிள் கட்டமைப்பு சீனாவின் கைகளில் சிக்காமல் தடுக்க அமெரிக்கா வலுவான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஜோ பைடன் நிர்வாகம் மறைமுகமாக நுழைந்து கூட்டமைப்பில் உள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்ட ஆரம்பித்துள்ளது.

அரசின் அழுத்தத்தால் கூட்டமைப்பில் இருந்த பல்வேறு நாடுகளின் நிறுவனங்கள் அமெரிக்க நிறுவனமான சப்காம் பக்கம் சாய்ந்தன.

இதன் மூலம் சீனாவின் எச்.எம்.என் போட்டியிலிருந்து விலகியது. இந்த திட்டம் அமெரிக்காவின் சப்கொம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

சீன அரசு மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் துணை நிறுவனம் என்று அழைக்கப்படும் ஹூவாவி நிறுவனத்தின் 5ஜி வலையமைப்பை நிறுவுவதில் இருந்து அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் விலகியுள்ளன.

நிறுவனம் அனைத்து தகவல்களையும் சீன அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்வதாக கூறப்படுகிறது.

அண்மையில் ஹூவாவி போர்வையில் சீன அரசாங்கம் கடல் அடிவாரத்தில் உள்ள இணைய பைபர் ஒப்டிக் கேபிள் கட்டமைப்பை உளவு பார்க்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த கேபிள்கள் மூலம் கடத்தப்படும் தரவுகள், சர்வதேச நிதி பரிவர்த்தனைகள், இராணுவ தகவல்கள் ஆகியவற்றை சீன மறைக்கும் ஆபத்து இருப்பதாக கூறப்படுகிறது.

சைபர் மற்றும் ரெலிக்கொம் வலையமைப்புகள் மூலம் சீன நிறுவனங்கள் உளவு பார்ப்பதாக அமெரிக்கா சந்தேகிக்கின்றது.

கடந்த காலங்களில், அமெரிக்க நிறுவனங்கள் சீன தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக்கூறி சீன தொலைத்தொடர்பு சாதனங்களின் அனுமதியை அமெரிக்க அரசாங்கம் ரத்து செய்தது.

இது தவிர, சீன ரெலிக்கொம் நிறுவனங்களும் அமெரிக்காவில் இருந்து செயற்பட தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)




# பாகிஸ்தான் வான்வெளிக்குள் நுழைந்தது இந்திய விமானம்!

இஸ்லாமாபாத், ஜூன் 13

அமிர்தசரஸில் இருந்து அகமதாபாத் சென்ற இண்டிகோ விமானம் மோசமான வானிலை காரணமாக பாகிஸ்தான் வான் வெளிக்குள் நுழைந்து பின்னர் பாதுகாப்பாக இந்திய வான்வெளிக்கு திரும்பியதாக விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இண்டிகோ விமானம் 6ஈ-645 கடந்த சனிக்கிழமை மோசமான வானிலை காரணமாக பாகிஸ்தான் வான்வெளிக்குள் செல்ல வேண்டியிருந்தது என்று விமான நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"இந்த சம்பவம் குறித்து பாகிஸ்தானுடன் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டது. குழுவினர் பாகிஸ்தானுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தனர். மேலும் விமானம் அகமதாபாத்தில் பாதுகாப்பாக தரையிறங்கியது," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இண்டிகோ விமானம் கடந்த சனிக்கிழமை இரவு சுமார் 7.30 மணியளவில் லாகூருக்கு வடக்கே நுழைந்து இரவு 8.01 மணிக்கு இந்திய வான்வெளிக்கு திரும்பியதாக தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் மூத்த அதிகாரியை மேற்கோள் காட்டி, மோசமான வானிலை நிலைமைகளில் இது "சர்வதேச அளவில் அனுமதிக்கப்பட்டது" என்பதால் இது அசாதாரணமானது அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம், பாகிஸ்தான் இன்டர்நேஷனல் ஏயார்லைன்ஸ் விமானம் பாகிஸ்தானில் கனமழை காரணமாக இந்திய வான்வெளிக்குள் நுழைந்து சுமார் 10 நிமிடங்கள் இருந்தது.

மே 4 ஆம் திகதி மஸ்கட்டில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்த பி.கே 248 என்ற விமானம் லாகூரில் உள்ள அல்லாமா இக்பால் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றது.

எனினும், பலத்த மழை காரணமாக விமானத்தை தரையிறக்க விமானிக்கு சிரமம் ஏற்பட்டது.

லாகூர் நோக்கிச் செல்லும் பல விமானங்கள் பார்வைத் திறன் குறைவாக இருந்ததால் இஸ்லாமாபாத்திற்கு திருப்பி விடப்பட்டன.

பாகிஸ்தானின் சில பகுதிகளில் பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எலிகளோடு சமாதான சகவாழ்வு!

## பாரிஸ் நகரம் முயற்சி!!

பாரிஸ், ஜூன் 13

உலகின் ஏனைய பல நகரங்களைப் போன்றே பாரிஸ் நகரவாசிகளும் மில்லியன் கணக்கான எலிகளோடு வாழ்கின்றனர். நிலத்தடி ரயில்வே சுரங்கங்கள் உட்பட எங்கும் எலிகளின் ராச்சியம் தான். ஆனாலும் பிற விலங்குகளால் ஏற்படுகின்ற ஆபத்துக்கள், நோய்களைப் போன்ற பெரிய பாதிப்புகள் எதுவும் எலிகளால் இல்லை. எலி கடித்தால் ஆபத்து என்று அஞ்சிய காலமும் இன்றில்லை. நாய் கடித்தால் ஊசி ஏற்றுவது போல எலிக் கடிக்கும் தடுப்பு மருந்துகள் உள்ளன. நகரின் இடுக்குகளில் அவை தம்பாட்டில் வாழ்கின்றன. பாரிஸ்வாசிகளிடம் உள்ள "எலிகளைப் பற்றிய வெறுப்பு உணர்வைத் தவிர்த்துப்பார்த்தால்" வேறு எந்த கஷ்டங்களும் இதுவரை எலிகளால் நேர்ந்ததில்லை.

ஓரிருவரைக் கடித்த சம்பவங்களைத் தவிர எலிகளால் பாதிக்கப்பட்டோர் எவருமில்லை. நகரவாசிகள் உணவுப் பொருள்களைக் கண்டபடி பெருமளவில் நிலத்தில் சிந்துவதும் குப்பைக்குள் கொட்டுவதுமே எலிகளின் படையெடுப்பக்குக் காரணமாகின்றது.

நச்சு உணவுப் பொறிகள் உட்பட எலிகளை அழிக்கின்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டிப் பல பில்லியன் நிதித்தொகைகளை ஒதுக்கி வேலைத் திட்டங்களை முன்னெடுத்தும் அவற்றை ஒழிப்பதில் நகர நிர்வாகம் படுதோல்வியைத்தான் சந்தித்துவருகின்றது. பெருந்தொகை நிதி விரயமாகிறது. பயன் ஏதும் இல்லை. பாரிஸ் நகரசபை கடந்த ஆறு ஆண்டுகளில் எலிகளை ஒழிப்பதற்காக 1.5 மில்லியன் ஈரோக்களைச் செலவு செய்துள்ளது.

வெளிநாட்டு உல்லாசப்பயணிகளினதும் நகரவாசிகளினதும் கண்படும் இடங்களில் எல்லாம் எலிகள் மிகச் சர்வசாதாரணமாக நடமாடுகின்றன.

எலிகளை அழிக்கின்ற வழிமுறைகள் பலனளிக்கவில்லை. அவற்றை ஒழிக்க நகர நிர்வாகம் இனிமேலாவது வினைத் திறனான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் - என்று எதிர்க் கட்சிகள் நகர மேயரை நோக்கிக் கடுமையாகக் குறை கூறி வருகின்றன.

அண்மையில் தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாகக் கழிவகற்றல் பணி தடைப்பட்டது. நகர வீதிகளில் குப்பைகள் குவியல்களாகத் தேங்கின. மறைவிடங்களில் இருந்து எலிகள் வீதிகளுக்குப் படையெடுத்தன. அச்சமயத்தில் எலிகளால் பெருந்தொல்லையை நகர மக்கள் சந்திக்க நேர்ந்தது. அதுபற்றிய விவாதங்கள் பாரிஸ் நகர சபையில் எழுந்துள்ளன.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரது கேள்விக்குப் பதிலளித்த பொதுச் சுகாதாரத்துக்குப் பொறுப்பான உதவி மேயர் ஆன் சுயூறி எலிகள் தொடர்பில் புதிய தீர்மானம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

நகரவாசிகளும் எலிகளும் ஒருவருக்கு ஒருவர் பாதிப்பு இல்லாதவாறு "சமாதான சகவாழ்வு" வாழமுடியுமா என்பதை மேயர் ஆன் கிடல்கோ குழு ஒன்றை நியமித்து ஆராய்ந்து வருகிறார் என்பதே அந்தத் தகவல்.

பொதுவாக எலிகள் நோய்க் கிருமிகளைப் பரப்புவதாக கூறப்பட்டாலும் நகரத்து எலிகள் பிளேக்கைப் போன்ற கொடிய நோயைப் பரப்புகின்ற கறுப்பு எலிகள் அல்ல.பாரிஸ் நகரத்து




எலிகள் லெப்டோஸ்பிரோசிஸ் போன்ற சாதாரண பக்ரீரியாக்களைப் பரப்பக்கூடிய பல்வேறு இனங்களைச் சேர்ந்தவை. எனவே நகர எலிகள் பொதுச் சுகாதாரத்துக்கு ஆபத்தானவையா என்பதை - அரசியல் அறிக்கைகள் விடுவதைத் தவிர்த்துவிட்டு- அறிவியல் ரீதியாக - ஆய்வு செய்து முடிவெடுப்போம் - என்றும் பிரதி மேயர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"பாரிஸ் நகர எலிகள் பொதுச் சுகாதாரத்துக்குக் குறிப்பிடக் கூடிய ஆபத்து எதனையும் வெளிப்படுத்தவில்லை. இது பற்றி பிரான்ஸின் பொதுச் சுகாதார உயர் அதிகார சபையின் கருத்தையும் அறியவுள்ளோம். எலிகளை அழிக்காமல் அவற்றோடு இணைந்து வாழ்வது என்பது அவறை நமது அறைகளிலும் குடியிருப்புகளிலும் அனுமதிப்பது என்று அர்த்தமல்ல. எங்களால் அவற்றுக்கு வலிகள் ஏற்படாதவாறும் அதேசமயம் எலிகளால் நகர வாசிகள் பாதிக்கப்படாத விதமாகவும் வாழ்கின்ற ஒரு வழிமுறையைக் கண்டறிவதே ஆகும்"

-இவ்வாறு நகரசபைப் பிரதி மேயர் விளக்கம் கொடுத்துள்ளார்.

பாரிஸ் நகரசபையின் இந்தத் தீர்மானத்தை நகரத்து விலங்குகளது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற அமைப்பு கைதட்டி வரவேற்றுள்ளது. (அ)



## 23 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்று ஜொகோவிச் சாதனை

பாரிஸ், ஜூன் 13

பிரெஞ்சு ஓப்பன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் நோர்வே வீரர் காஸ்பர் ரூட்டை வீழ்த்தியதை தொடர்ந்து ரென்னிஸ் சகாப்தத்தில் 23 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற முதல் வீரர் என்ற வரலாற்றை படைத்தார்.

காஸ்பர் ரூட்டை 7-6 (7-1), 6-3, 7-5 என்ற செற் கணக்கில் வீழ்த்தினார். 34ஆவது முறையாக கிராண்ட்ஸ்லம் இறுதிப் போட்டியில் விளையாடிய ஜொகோவிச் பெறும் 23ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டம் இதுவாகும். முன்னதாக, ஆடவர் ஒற்றையர் ரென்னிஸில் ரபேல் நடால் 22 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை பெற்றதே சாதனையாக இருந்தது. அதனை ஜொகோவிச் நேற்று முந்தினார். ஒவ்வொரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் குறைந்தது மூன்று முறை வென்ற முதல் வீரர் என்ற பெருமையையும் ஜொகோவிச் படைத்தார்.

இதில் இன்னோர் ஆச்சரியமாக, ஜொகோவிச் வென்ற 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் 10இற்கும் மேற்பட்டவை அவர் 30 வயதுக்குமேல் வென்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அஸ்வினை அணியில் சேர்காததை புரிந்து கொள்ளவே முடியவில்லை

### சச்சின் டெண்டுல்கர்

புதுடில்லி, ஜூன் 13

உலக டெஸ்ட் சம்பியின்ஷிப்பில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியா மோசமான தோல்வியை சந்தித்தது. அஸ்வினை விளையாடும் அணியில் எடுக்காததும் நாணயச் சுழற்சியில் பந்து வீச்சை தெரிவு செய்ததும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்நிலையில், அஸ்வின் நீக்கம் குறித்து சச்சின் டெண்டுல்கர் கருத்து வெளியிடுகையில்,

அஸ்வின் போன்ற திறமையான ஓவ் ஸ்பின்னர்கள், சாதகமில்லாத ஆடுகளங்களில்கூட சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடியவர்கள். வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் அவரின் திறமையை பயன்படுத்த முடியாது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. போட்டியின் முதல் இன்னிங்ஸில் நிலைத்து நின்று, பெரிய ஆட்டத்தை இந்தியா வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவர்களால் அது இயலவில்லை.

திறமையான சுழல்பந்து வீச்சாளர்கள், 'ரேர்னிங் ட்ராக்' எனப்படும் சுழல்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தை மட்டுமே நம்பி இருப்பதில்லை. அவர்கள் காற்றின் சுழற்சியையும், பவுன்சரையும் சாமர்த்தியமாக பயன்படுத்தி வெற்றி தேடித்தருவார்கள். இந்த கருத்தை ஏற்கனவே ஆட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பாகவே நான் வெளிப்படுத்தியிருந்தேன். முதல்நிலை எட்டு துடுப்பாட்ட வீரர்களில் 5 இடது கை துடுப்பாட்ட வீரர்களுடன் அவுஸ்திரேலியா களமிறங்கியதை நாம் மறந்து விடக்கூடாது. இவ்வாறு சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.



# ஊதியத்தை முழுமையாக இழந்தது இந்திய அணி!

டுபாய், ஜூன் 13

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் பங்கேற்ற இந்திய, அவுஸ்திரேலிய அணிகள் குறித்த நேரத்துக்குள் பந்துவீசி முடிக்கத் தவறியதால் இரு அணிகளுக்கும் சர்வதேச கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது.

லண்டனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 209 ஓட்டங்களால் வெற்றியீட்டி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் முடிவடைந்த இப்போட்டியில் குறித்த நேரத்துக்குள் பந்துவீசி முடிக்கத் தவறியமைக்காக இந்திய வீரர்களுக்கு அவர்களின் ஊதியத்தில் 100 சத வீதமும் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு ஊதியத்தில் 80 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

இதன்படி, இந்திய அணியினர் இப்போட்டிக்கான தமது முழு ஊதியத்தையும் இழந்துள்ளனர்.

இந்தியா குறித்த நேரத்துக்குள் 5 ஓவர்கள் குறைவாகவும் அவுஸ்திரேலியா 4 ஓவர்கள் குறைவாகவும் வீசின என்று ஐ. சி. சி. தெரிவித்துள்ளது.

இந்திய அணித்தலைவர் ரோஹித் சர்மா மற்றும் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பட் கம்மின்ஸ் ஆகியோர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மேலதிக விசாரணைகளை நடத்தவில்லையென ஐ. சி. சி. தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனது ஆட்டமிழப்புக்கு காரணமான பிடி குறித்து சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை வெளியிட்ட இந்திய வீரர் ஷூப்மன் கில்லுக்கு போட்டி ஊதியத்தில் மேலும் 15 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு ஓர் ஒழுக்கமீறல் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஐ. சி. சி. தெரிவித்துள்ளது. (ஐ)

## ஒருநாள் உலகக் கிண்ணம் ஒக். 15 இந்தியா - பாக். மோதல்!

புதுடில்லி, ஜூன் 13

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கான வரைவு அட்டவணை அடிப்படையில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி மோதவுள்ளன.

இந்திய கிரிக்கெட் சபை வரைவு அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபையுடன் பகிர்ந்து கொண்டது. அடுத்த வார தொடக்கத்தில் இறுதி அட்டவணை வெளியிடப்படும்.

வரைவு அட்டவணையின் பிரகாரம்,
இந்தியா எதிர் ஆப்கான் - ஒக். 11, டில்லி
இந்தியா எதிர் பாக். - ஒக். 15, அகமதாபாத்
இந்தியா எதிர் பங்களாதேஷ் ஒக். 19, புனே
இந்தியா எதிர் நியூசிலாந்து -ஒக்.22, தர்மசாலா
இந்தியா எதிர் இங்கிலாந்து - ஒக். 29, லக்னோ
இந்தியா எதிர் தகுதி அணி, நவ. 2, மும்பை
இந்தியா எதிர் தென்னாபிரிக்கா, நவ. 5, கொல்கத்தா
இந்தியா எதிர் தகுதி அணி நவ. 11, பெங்களூர்

வரைவு அட்டவணையில் நவம்பர் 15 மற்றும் 16 ஆம் தேதிகளில் நடைபெறும் அரையிறுதிப் போட்டிக்கான இடங்கள் குறிப்பிடப்படவில்லை. (ஐ)







## சம்பியன்ஸ் லீக் கிண்ணமும் மன்செஸ்டர் சிற்றி வசமானது

இஸ்தான்புல், ஜூன் 13

மன்செஸ்டர் சிற்றி 1-0 என்ற கோல் கணக்கில் மிலனை தோற்கடித்து சம்பியன்ஸ் லீக் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

கழக அணிகளுக்கான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் இறுதிப்போட்டியில் மன்செஸ்டர் சிற்றி (இங்கிலாந்து), இன்டர் மிலன் (இத்தாலி) அணிகள் துருக்கியின் இஸ்லான்புல் நகரில் மோதின.

முதல் பாதியில் கோல் ஏதும் அடிக்காத நிலையில் 68ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் வீரர் ரொட்ரி கோல் போட்டார். அதுவே வெற்றிக்கும் வித்திட்டது.

முடிவில் மன்செஸ்டர் சிற்றி 1-0 என்ற கோல் கணக்கில் மிலனை தோற்கடித்து கிண்ணத்தைத் தனதாக்கியது. ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் பட்டத்தை மன்செஸ்டர் சிற்றி வெல்வது இதுவே முதல் முறையாகும். இந்தத் தொடரில் பிரீமியர் லீக் எவ். ஏ. கிண்ணத்தை சுவைத்த மன்செஸ்டர் சிற்றிக்கு இது 3ஆவது மகுடமாக அமைந்தது. (ஐ)

# 2 நாட்கள் காய்ச்சல் இருந்தால் மருத்துவ உதவியை நாடுங்கள்

## சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தல்

**கொழும்பு, ஜூன் 13**
**இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருப்பவர்கள் கட்டாயம் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளவேண்டும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

மேலும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஓய்வு எடுப்பதே மிக முக்கியமான விடயம் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே கூறினார்.

காச்சல் அறிகுறிகள் காணப்பட்டால் அவர்கள் பாடசாலைக்கோ அல்லது வேலைக்கோ செல்லாமல் சில நாட்கள் வீட்டில் இருந்து ஓய்வெடுக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

காய்ச்சலைக் கட்டுப்படுத்த பரசிற்றமோல் மருந்தை உட்கொள்ளலாம் என்றாலும் டிஸ்பிரின், அஸ்பிரின் அல்லது இது போன்ற மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் டிஸ்பிரின் அல்லது அஸ்பிரின் போன்ற மருந்துகளை உட்கொண்டால் அது கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்றும் ஹரித அலுத்கே குறிப்பிட்டார்.

இரண்டாவது நாளில் காய்ச்சல் கட்டுக்குள் வரவில்லை என்றால், மருத்துவ உதவியை நாடவேண்டும் என அவர் வலியுறுத்தினார். (அ)

# கரையோர ரயில் சேவை பாதிப்பால் மக்கள் அவதி

கொழும்பு, ஜூன்
கரையோர ரயில் பாதையில் ரயில் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மொறட்டுவை, எகொடஉயன ரயில் நிலையத்துக்கு அருகில் தண்டவாளம் உடைந்துள்ளதால் கரையோரப் ரயில் பாதையில் ரயில்களை இயக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனால் குறித்த பகுதியில் உள்ள மக்கள் பெரும் அவதி நிலைக்கு தள்ளப்பட்டனர். பணிகளுக்குச் செல்வோர் சிரமத்தை எதிர்நோக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ரயில் நிலையத்துக்கு அருகில் உடைந்த தண்டவாளம் தற்போது சீர்செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# புலம்பெயர் தொழிலாளர்கள் அனுப்பும் பணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 13
புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு பணம் அனுப்புவது அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த மே மாதம் 479.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, இவ்வருடத்தின் கடந்த மே மாதம் வரை வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பிய பணம் 2,346.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

# நாணய நிதியத்தின் ஒப்பந்தங்கள் 3 மாதங்களில் நிறைவேற்றப்படும்!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய நம்பிக்கை



கொழும்பு, ஜூன் 13
சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை அடுத்த மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அதன் முன்னேற்றம் குறித்து ஆராய, இது தொடர்பாக, மத்திய வங்கியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

வரையறுக்கப்பட்ட காலக்கெடுவுடன் செயல்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், தற்போது அது முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துடன் தொடர்புடைய இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# ஓட்டோ - டிப்பர் வாகனங்கள் மோதி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலி!

கொழும்பு, ஜூன் 13
கொழும்பு-குருநாகல் பிரதான வீதியின் வரக்காபொல துல்ஹிரிய பிரதேசத்தில் ஓட்டோ ஒன்று டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று நடந்த இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் 40 வயது ஆண், அவரது 39 வயது மனைவி மற்றும் அவர்களது 13 வயது மகன் ஆகியோர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# வட மாகாண ஆளுநருடன் சுமந்திரன் எம் பி சந்திப்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 13
வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்ற திருமதி பி.எஸ்.எம் சாள்ஸை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

வடக்கின் வளர்ச்சி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் இருவரும் கலந்துரையாடியதாக கூறப்பட்டது. (அ-2)

# பாராளுமன்றத் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும்

## சஜித் அணி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13
"மக்கள் ஆணையை இழந்த பாராளுமன்றத்தை உடனடியாக கலைத்துத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உள்ளோம்" -என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த வருடம் புரட்சி ஒன்று இடம்பெற்றது. அந்தப் புரட்சியின் விளைவாக ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விரட்டப்பட்டார். பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விரட்டப்பட்டார். நிதி அமைச்சர் பதவியிலிருந்து பஸில் ராஜபக்ஷ விரட்டப்பட்டார். அமைச்சரவையும் விரட்டப்பட்டது. மொத்தமாக அரசே விரட்டப்பட்டது.

கோட்டாபய சட்ட ரீதியான ஜனாதிபதி. அப்படி இருந்தும், அவருக்கான அங்கீகாரம் இல்லாமல் போனது.

பாராளுமன்றத்துக்கும் இதே நிலைதான். இதனால் மக்கள் விரும்புகின்றவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

அப்படிப்பட்ட பாராளுமன்றத்தால்தான் நாட்டைச் சரியாக இட்டுச் செல்ல முடியும். இதனால் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நிற்கின்றோம்-என்றார். (அ)

# மனித உரிமை ஆணைக்குழுவுக்கு விரைவில் புதிய தலைவர் நியமனம்

கொழும்பு, ஜூன் 13
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக மேலும் ஒரு முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

அண்மையில் கூடிய அரசியலமைப்புப் பேரவையில் இது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த வாரம் அரசியலமைப்புப் பேரவை கூடும் திகதி குறித்து இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என கூறப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, அந்த ஆணைக்குழுவின் ஏனைய ஆணையாளர்களில் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக உள்ள சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவும் அடங்குவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இதுவரை புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை.

முன்னதாக இந்த ஆணைக்குழுக்களுக்கான புதிய உறுப்பினர்கள் நியமனம் மிக விரைவில் நடைபெறும் என அரசியலமைப்பு பேரவை அறிவித்திருந்தது. (அ)

# இரண்டு மாதங்களுக்குள் ஈ-ரிக்கெட் முறை அறிமுகம்

கொழும்பு, ஜூன் 13
எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இ-டிக்கெட் முறையை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவித்த அவர், இதன்மூலம் மோசடி ஊடாக இழந்த வருமானத்தை மீளப்பெற முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த சனிக்கிழமை மாத்தறையில் இருந்து மகும்புர வரையில் போக்குவரத்துச் சபையினால் வழங்கப்பட்ட பயணச்சீட்டு இயந்திரத்தைப் பயன்படுத்தாமல் மற்றுமொரு பயணச்சீட்டுப் புத்தகத்திலிருந்து பயணச்சீட்டு வழங்கி மோசடி ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். (அ)

## கட்டளையை...

நான் உங்களுக்கு வரலாற்று கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா?", என்று தொல்பொருள் பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார்.

முல்லைத்தீவில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 229 ஏக்கர் காணியை விடுப்பதற்கான கடிதத்தை ஜுன் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்திருந்தார்.

எனினும், இதுவரையில் அதற்கான பதில் வழங்கப்படவில்லை என தமிழரசு கட்சியினரால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலளித்த பணிப்பாளர் நாயகம் , "எனக்கு அந்தக் காணிகளை விடுவிப்பதில் பெரும்சிக்கல் காணப்படுகிறது." எனக் குறிப்பிட்டார்.

எனினும், அது அமைச்சரவையின் கொள்கை என்றும் அதனை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி கடுந்தொனியில் தெரிவித்தார். அடுத்த முறை இவ்வாறு தேசிய கொள்கையை பின்பற்றாமைக்கு காரணங்களை முன்வைத்துக் கொண்டிருக்கக்கூடாது என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

விகாரை ஒன்றை அமைப்பதற்கு 275 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்தால் அது மகா விகாரையை விடவும் பெரியதாகி விடும். மகா விகாரை, தியதவனாராமய மற்றும் அபயகிரி உள்ளிட்ட அனைத்து விகாரைகளை இணைத்தால் 100 ஏக்கர் காணப்படும்.

அவ்வாறெனில் இவற்றை விட பெரும் விகாரையை அமைப்பதற்காகவா நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாற்று கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? என்று ஜனாதிபதி பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக ஒரு விகாரைக்கு 220 ஏக்கர் நிலப்பரப்பு உரித்துடையதாகக் காணப்படும் என்று நான் நினைக்கவில்லை. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் - என்றும் ஜனாதிபதி கூறினார்.

பொது மக்களின் 3000 ஏக்கர் காணியை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது. பனாமுரே திலக வன்ச என்ற தேரரே தற்போது அந்த காணியை ஆக்கிரமித்துள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இதன் போது சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்த கிழக்கு தொல்பொருள் பாதுகாப்பு செயலணியின் உறுப்பினராக அந்த தேரர் செயல்பட்டார் என்றுஅதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி,"அந்த செயலணி தற்போது செயல்பாட்டில் இல்லையல்லவா? அந்த செயலணி அரசாங்கத்தின் காணியையோ அல்லது தனியாரின் காணியையோ ஆக்கிரமிக்க முடியாது. இதில் என்ன சட்ட முறைமை காணப்படுகிறது? வனப்பகுதிகள் உங்களுக்கு உரித்தானவை அல்ல அல்லவா?

திரியாயில் எதற்காக 3 ஆயிரம் ஏக்கர் காணி தேவைப்படுகிறது? திரியாய் என்பது விகாரையல்ல. முன்னயை காலங்களில் அது துறைமுக மையமாகும். படகின் மூலம் திரியாயிலிருந்து ஹொரவபொத்தானை வரை செல்ல முடியும். பின் ஹொரவபொத்தானையிலிருந்து அநுராதபுரத்துக்கும், அங்கிருந்து மல்வத்து ஓயாவுக்கும் அங்கிருந்து மன்னாருக்கும் செல்ல முடியும்.

அந்தப் பகுதியில் வரலாற்று சிறப்பு மிக்க இந்து கோவில் ஒன்றும் காணப்பட்டது. எனவே, அங்கு தேரர்களால் வைக்கப்பட்டுள்ள கற்களை உடனடியாக நீக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## ரணில்...

அரசாங்கத்தை தோற்கடிக்கும் பொதுவான இலக்கை நிறைவேற்ற அனைத்து எதிர்க்கட்சிக ளும் இணைவதற்கு முன்னுரிமை அளிப்பதே எங்கள் நோக்கம். எனவே, எதிர்க்கட்சிகளிடையே பொதுவான உடன்பாட்டை உருவாக்குவதே எங்கள் அணுகுமுறை. அனைவரும் தங்கள் கட்சி மற்றும் தனிப்பட்ட இலட்சியங்களை பற்றி சிந்திப்பதை விட ஒரு பொதுவான திட்டத்தில் உறுதியாக இருக்க வேண் டும் - என்றார்.

இதேவேளை,

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தமது கட்சி தற்போது அழகப்பெரும தலைமையிலான குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

"நாங்கள் தற்போது அழகப்பெருமவின் குழுவுடன் ஒரு கூட்டு வேலைத் திட்டத்தில் பேசுகிறோம். எனினும், சுதந்திர மக்கள் கூட்டணியில் இணைய முடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்த உரையாடல் சாத்தியமா என்பதும் எங்களுக்குத் தெரியாது. என்றும் கூறினார். (ஐ)

## பதவி...

முக்கிய திணைக்களங்களின் பணிப்பாளர்களும் பங்கேற்றிருந்தனர். இதன் போது, வடக்கு, கிழக்கில் நீடிக்கும் காணி ஆக்கிரமிப்புகள் தொடர்பாகவும் பேசப்பட்டன.

இந்தப் பேச்சின்போது தொல்பொருள் திணைக்களத்தின் பெயரால் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் பௌத்த மதம் சார்ந்து ஆக்கிரமிக்கப்பட்டமை குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அத்துடன், ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி காணிகள் ஆக்கிர மிப்பு தொடர்வதும் சுட்டிக்காட் டப்பட்டது.

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரின் இந்த நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி கடும் எச்சரிக்கை விடுத்தார். இது தொடர்பான காணொ லிகள், செய்திகள் பரவிய நிலையில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

பேராசிரியர் அநுர மானசிங்க கடந்த 2021 ஜனவரியில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளராக பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்களுக்கு...

தங்களுக்கும் இலாபத்தை வைத்து கொண்டு மக்களுக்கும் சலுகை வழங்க வேண்டும் என்றும அவர் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக தற்போதுள்ள நடைமுறை பிரச்னைகளை தீர்க்க அரசாங்கம் செயல்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

நேற்றுமுன்தினம்கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலைய முனையத்தில் விமானப் பயணிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கான சோ சிலோன் ஓய்வறை வசதியை திறந்து வைத்தபின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## 13இன்...

விக்னேஸ்வரன் எம். பியும் கலாநிதி விக்னேஸ்வரனும் சந்தித்துப் பேசினர். இந்த சந்திப்பு தொடர்பில் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இடைக்கால நிர்வாக சபை என்பது தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கு தீர்வல்ல. ஏற்கனவே 13ஆவது சட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட சரத்துக்களை மீளவும் பெறுவதற்கான நோக்கமுடையது. தேர்தல் நடத்தப்படாததால் இயங்காமல் உள்ள மாகாண சபைகளை மீளவும் நிர்வகிக்க வேண்டும். மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும் என்று பிரதமரிடம் கோரிக்கை விடுத்தோம்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தரப்பட்ட பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. மாகாண சபையின் நிர்வாகத்துக்கு கீழ் இருந்த அதிகாரிகள் பலர் மத்திய அரசாங்கத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். மாகாணத்துக்கு உரிய கல்லூரிகள் பலவற்றையும் மருத்துவமனைகளையும் மத்திய அரசாங்கம் எடுத்துள்ளது.

எனவே, பறிக்கப்பட்ட அதிகாரங்களை மாகாணங்களுக் மீண்டும் வழங்கும் நோக்கில் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அவர்களின் அறிவுரையை பெற்று ஜனாதிபதி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாகாணங்களிடம் பறிபோன அதிகாரங்களை மீள அளித்து மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும். பலப்படுத்தப்பட்ட - திருத்தப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பிரதமரிடம் கோரினோம் - என்றார். (ஐ)

## அகவை 90இல்...

உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனந்தசங்கரி 1933 ஜுன் 15ஆம் திகதி பருத்தித்துறையில் பிறந்தார். புத்தூர் சோமஸ்கந்தா, அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, கொழும்பு சாஹிரா கல்லூரியில் கல்வி கற்றிருந்தார். சட்டத்தரணியான அவர் சில காலம் பாடசாலை ஆசிரியராகவும் சேவையாற்றியிருந்தார்.

1955இல் லங்கா சமசமாஜ கட்சி ஊடாக அரசியலுக்கு பிரவேசித்தார். 1965 வரை அவர் அந்தக் கட்சியில் நீடித்திருந்தார். 1960ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலின்போது முதன்முறையாக கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். 1966இல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் இணைந்த அவர் 1970 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழரசு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிகள் இணைந்து 1972ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய கூட்டணி உருவாக்கப்பட்டது. இதுவே பின்னாளில் - 1976 மேல் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியாக மாறியது. 1977இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் இந்தக் கட்சியின் சார்பாக வெற்றி பெற்றார்.

1984ஆம் ஆண்டு கிளிநொச்சி தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. கிளிநொச்சி தனி மாவட்டமாக உருவாவதற்கு ஆனந்தசங்கரியின் பங்களிப்பே அதிகம் இருந்தது.

2000ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் தலைமை வேட்பாளராக இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2001இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் சின்னத்திலேயே கூட்டமைப்பு போட்டியிட்டது. அப்போது நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு ஆனந்தசங்கரி வெற்றி பெற்றார்.

2004ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை தொடர்ந்து தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதியுடன் ஜீவனும் இந்தியாவுக்கு பறக்கின்றார்

கொழும்பு, ஜுன் 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜுலை 21ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளமை உறுதியாகியுள்ளது. ஜனாதிபதியுடன் அமைச் சர் ஜீவன் தொண்டமானும் செல்கின்றார்.

இந்திய பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் ஜனாதிபதி தலைமையிலான இலங்கை குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் கலை, கலாசார உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

## ரணில் - பெரமுன...

மாலை 6 மணிக்கு சந்திப்பு ஆரம்பமானது. எனினும், ஒரு மணி நேரத்திலேயே சந்திப்பு இடத்திலிருந்து அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறினர்.

முன்னதாக இந்த சந்திப்பில் பங்கேற்க பெரமுன கட்சியின் மாவட்ட தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டியதில்லை என்று பெரமுன கட்சியின் மேலிடம் அறிவித்திருந்தது.

அத்துடன், ஜனாதிபதி தமது கட்சியின் மாவட்ட தலைவர்களை சந்திப்புக்கு அழைத்தது குறித்து பொது ஜன பெரமுன வட்டாரங்கள் அதிருப்தியும் வெளியிட்டுள்ளன. (ஐ)

## மீன்உண்ட...

இந்த சம்பவம் குறித்து அறிய வருவதாவது,

மாங்காடு கடல் பகுதியில் மீனவர்களின் வலையில் சிக்கிய பேத்தை இன மீனை வீசியிருந்தனர். அந்த மீனை அங்கு சென்றிருந்த (பாதிக்கப்பட்ட) குடும்பத்தினர் எடுத்துள்ளனர். அச்சமயம் மீனவர்கள் அது சமைப்பதற்கு உரிய மீனல்ல என்று கூறியுள்ளனர்.

ஆனால், அதை மீறி அவர்கள் அந்த மீன்களை எடுத்துச் சென்று சமைத்து உண்டுள்ளனர். இதில், பாதிக்கப்பட்ட நால்வரும் மயக்கமுற்ற நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில், அன்றைய தினம் மாலை 27 வயது பெண் உயிரிழந்தார். எனினும், மற்றைய மூவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிலையில், சிகிச்சை பெற்று வந்த 50 வயதான ஜுலியாமலர் என்பவர் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை இரவு உயிரிழந்தார்.

19 வயது பெண்ணும் மூன்றரை வயது ஆண் குழந்தையும் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். (ஐ)

## துள்ளும்...

அவர்களின் அறியாத்தனம் என்றே கூறவேண்டும். இதற்காக அவர்களை பாராளுமன்றத் துக்கு அனுப்பிவைத்த தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்ததற்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டுத் துள்ளிக் குதிக்காமல் இருக்க வேண்டும். அவர்கள் அடக்கி வாசிக்க வேண்டும். இல்லையேல் சிறையில்தான் அவர்கள் அடைக்கப்படுவார்கள்.

பொலிஸாருடன் சண்டித்தனம் காட்டும் அளவுக்குத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் துணிவு வந்துள்ளது. இப்படியானவர்களை கைது செய்து அவர்களுக்குப் பிணை வழங்காமல் சிறையில்தான் தொடர்ந்து அடைத்து வைத்திருக்க வேண்டும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்ச்சவடால் பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி எடுபடாது. முதலில் அவர்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நன்றாகத் தெளிவடைய வேண்டும்." - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பிரதமர் மோடி மனம் வைத்தால் மகனை என்னிடம் சேர்க்கமுடியும்

## சாந்தனின் தாயார் கண்ணீர்க் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜுன் 13

**மகனை மனச்சாட்சியின் அடிப்படையில் விடுதலை செய்தவர்கள் மீண்டும் மகன் தன்னுடன் வந்து சேர்வதற்கும் பிரதமர் மோடி உட்பட அனைத்து தலைவர்களும் வழிவகை செய்யவேண்டும் எனவும், தனது கண் பார்வை கெட்டுப் போவதற்கு முன்னதாக மகனைப் பார்க்கவேண்டும் எனவும் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நவம்பர் மாதம் 11 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட எனது மகன் வருவார் என்று எதிர்பார்த்து காத்திருந்தபோதிலும் இது வரையிலும் எந்த தொடர்பும் கிடைக்கவில்லை.

மகன் இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளமையை பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டேன். பிரதமர் மோடி எனக்கு மகன் போன்றவர். நான் அவருக்கு தாய் போன்றவர். ஆகவே அவர் எனது மகனை என்னுடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மகனை பார்த்து 32 வருடங்கள் ஆகின்றன. ஏற்கனவே எனது வலது கண் பார்க்க முடியாத நிலையில் உள்ளது. இடது கண்ணும் கெட்டு போவதற்கு முன்னர் மகனை பார்க்கவேண்டும்.

மனசாட்சிப்படி எவ்வாறு எனது மகனை விடுதலை செய்தீர்களோ அவ்வாறு அவரை என்னுடன் சேர்ப்பதற்கு வழி செய்யுங்கள்.

மோடி ஐயா மனசு வைத்தால் எனது பிள்ளையை என்னுடன் சேர்க்க முடியும்.

எத்தனையோ தலைவர்கள் போராட்டம் நடத்தி பெரும்பாடு பட்டே பிள்ளைக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தனர். அதே போன்று மகனை என்னுடன் சேர்த்தால் உங்களுக்கு கோடான கோடி புண்ணியம் கிடைக்கும்.

பிள்ளை வரப்போவதாக எல்லா விதமான சாப்பாட்டு பொருட்களையும் வாங்கி வைத்தேன். அவை காலாவதியாகி விட்டன.

32 வருடங்களாக பிள்ளையின் குரலை கேட்கவோ அல்லது முகத்தை பார்க்கவோ இல்லை. பிள்ளையும் அந்த நிலையிலே உள்ளது. பாவம் செய்த குடும்பமாகவும் வித்தியாசமாக தியாகம் செய்த குடும்பமாகவும் நாம் உள்ளோம்.

பிள்ளை இங்கு வருகின்றவேளையில் ஒரு மாதமாவது நான் சமைத்து கொடுக்கவேண்டும்.

மகனின் குரலை கேட்பதற்காவது ஏதேனும் வழிவகை செய்து தாருங்கள். மகனை அலைந்து திரிந்து பார்க்கும் அளவில் எனது உடல் நிலை இல்லை-என்றார். (அ)



# நிலையான சமாதானத்தை வலியுறுத்தி யாழிலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரை!

யாழ்ப்பாணம், ஜுன் 13

நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரையான பாதயாத்திரை நேற்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகியது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும் இந்த யாத்திரை சந்நிதியான் ஆலய பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாக பணிப்பாளர் மனுர சமன் பெரேரா, வடமாகாணப் பணிப்பாளர் காமினி, யாழ்.மாவட்ட பணிப்பாளர் வினோதினி சிறிமேனன்,

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டு சம்பிரதாயபூர்வமாக யாத்திரையை ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த யாத்திரிகர்கள் உகந்தை முருகன் ஆலயம் சென்று அங்கிருந்து சுமார் 300 இளைஞர்கள், யுவதிகள் நாடளாவிய ரீதியில் யாத்திரை செல்லவுள்ளனர்.

இதில் இளைஞர்சேவை மன்றங்களின் நிசவாகிகள், கிராம சேவகர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மின் கட்டணம் 3 வீதம் குறைப்பு

கொழும்பு, ஜுன் 13

இம்முறை மின்சாரக் கட்டண திருத்தத்தின் மூலம் மொத்தமாக 3 வீதம் குறைப்பு ஏற்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் மத வழிபாட்டுத் தலங்களின் மின்சாரக் கட்டணம் 3.2 வீதம் குறையும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், தெரு விளக்குகள், தொழிற்சாலைகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கான மின் கட்டணம் மாற்றப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் ஹோட்டல்களுக்கான மின்சாரக் கட்டணத்தில் 12.6 வீதம் குறைப்பு அமுல்படுத்தப்படலாம் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# போராட்டத்தை கலைப்பதற்காகவே ரணிலை ஜனாதிபதியாக்கினோம்!

## கூறுகின்றார் சனத் நிஷாந்த

கொழும்பு, ஜுன் 13

போராட்டத்தை கலைப்பதற்காகவே பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தது என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவை பிளவுப்படுத்தும் தேவை எமக்கில்லை. பொதுஜன பெரமுனவின் ஒரு அணி ஐக்கிய தேசியக் கட்சிக்கு செல்லவோ, ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு அணியை எமக்கு கட்சியில் இணைப்பதே எமது தேவையல்ல.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம் என்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நாங்கள் வேலை செய்யமாட்டோம்.

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்தவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே நாங்கள் பணியாற்றுவோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டு வரும் சகல யோசனைகளையும் அனுமதிக்கவேண்டிய தேவை எமக்கில்லை.

நாங்கள் மகிந்தவின் கீழ் வளர்ந்தவர்கள். நாங்கள் அவர் கொண்டு வந்த அனைத்து யோசனைகளையும் ஆதரிக்கவில்லை. அவர் தவறு செய்தால், அதனைச் சுட்டிக்காட்டினோம்-என்றார். (அ)

# மடுமாதா ஆடித் திருவிழா ஏற்பாடு குறித்து ஆராய்வு

மன்னார், ஜுன் 13

மன்னார், மடு திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழா குறித்து ஜனாதிபதி தலைமையில் ஆராயப்பட்டுள்ளதாக மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மறை மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மருதமடு ஆலயத்தின் ஆடி மாத திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், உரிய திணைக்கள தலைவர்கள், பாதுகாப்பு தரப்பினர் என பலர் கலந்துகொண்டனர்.



இக்கலந்துரையாடல் தொடர்பில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜுலை மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ள மடு அன்னையின் ஆடி திருவிழாவுக்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக சுகாதாரம், மருத்துவம், குடிதண்ணீர், போக்குவரத்து, பாதுகாப்பு, உணவு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக பேசப்பட்டன.

இம்முறை பல்லாயிரக்கணக்கான மக்கள் திருவிழாவுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதால் பல்வேறு விடயங்களை பற்றி உரையாடப்பட்டது.

இவ்வருடம் சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஆடி திருவிழாவில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும்.

ஜுலை மாதம் 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறை மாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து, மருதமடு அன்னையின் திருச்சொரூப ஆசியுடன் திருவிழா நிறைவடையும்-என்றார். (அ)

# மத்திய மாகாண ஆளுநராக பாலித ரங்கே பண்டார?

கொழும்பு, ஜுன் 13

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரான பாலித ரங்கே பண்டார, மத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார் என தெரியவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐரோப்பிய விஜயத்தின் பின்னரே இந்நியமனம் வழங்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநராக இன்று பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# வாராந்தம் 2,500 இற்கு மேற்பட்டோர் டெங்குக் காய்ச்சலினால் பாதிப்பு!

கொழும்பு, ஜுன் 13

நாடளாவிய ரீதியில் வாராந்தம் 2,500 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயினால் பாதிக்கப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேசமயம் கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு அதிகளவிளான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.